"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

தேவ எக்காளம்

CHRISTIAN LIBRARY

"......அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்" (அப். 10:38)

"தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர் ......" (சங். 119:68)

ஜூலை 1973

Vol. V No. 7

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

...து தூதுகள், அனுபவ சாட்சிகள் முதலியன எக்காளத்தில் வெளியிடப்படவிருக்கின்றன ஒரு மாத எக்காளம் மோட்சத்தையும் மற்றொரு மாத எக்காளம் நரகத்தையும் பற்றிய செய்திகளைத் தாங்கி வெளிவரும். கர்த்தருடைய அன்பில் நிலைத்திருக்கும் மெய்யான தேவப் பிள்ளைகள் மேற்கண்ட தலைப்புகளில் தூதுகளையோ அல்லது தங்கள் வாழ்வில் கண்ட சொப்பனங்கள், தரிசனங்களையோ அல்லது மொழிபெயர்ப்புக்கானச் செய்திகளையோ தெய்வ ஒத்தாசையுடன் எழுதி அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(பத்)

எக்காளத்தின் கால தாமதம்

எக்காளம் ஏன் மாதா, மாதம் ஒழுங்காக வெளிவருவதில்லை என்று அன்பர்கள் பலர் கேட்டெழுதுகின்றனர். இதன் ஒரே காரணம் பத்திரிகைக்கான சந்தாக்களை ஒழுங்காக அனுப்பி உதவாத தேவப்பிள்ளைகளையே சாரும் என்று துக்கத்தோடு கூற விரும்புகின்றேன். ஒவ்வொரு மாதமும் செய்திகள் தயாரிக்கப்பட்டு அச்சுக்கு அனுப்பும்போது முந்திய மாத அச்சுக் கூலியையும் சேர்த்து அனுப்ப வேண்டும். பணம் வந்து சேராத காரணங்களால் செய்திகளை அனுப்ப முடியாமல் தவிக்கிறோம். ஒத்தாசை வரும் பர்வதங்களை நோக்கிக் கண்ணீரோடு காத்திருக்கின்றோம். மாதத்திற்கு 4 குமுதம் 4 கல்கண்டு 4 ராணி வாங்கி வாசிக்கச் சற்றும் தவறாத அநேக அன்பர்கள் நித்திய மதிப்புடைய தங்கள் ஆத்தும நலனுக்காக மாதம் 16 பைசாக்கள் செலவிடப் பின்னிடுவது விந்தையிலும் விந்தையே. "மனிதன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (What shall a man give in Exchange for his Soul?) என்று நமது இரட்சகர் ஆன்ம விலைமதிப்பைச் சுட்டிக் காண்பித்தார். விலையேறப்பெற்ற உன் ஆத்தும இரட்சிப்பைக் கருதி மாதாமாதம் அநேக தகனிப்புகள், போராட்டங்கள், கண்ணீர்களின் ஊடாகப் பயணம் செய்து உன் கரங்களில் வந்து விழும் எக்காளத்தை அல்லத்தட்டி, அதன் தூதுகளை உதாசீனம்பண்ணி ஜீவித்துக் கடைசியாக நீ நினையாத நேரத்தில், நீ நினையாத இடத்தில், நீ நினையாத விதத்தில் மரணத்தால் பிடியுண்டு எரிகிற அவியாத அக்கினிக் கடலில் உன் நித்திய ஜீவனை ஆரம்பிக்குமுன் உனது இரட்சிப்புக்கான கிருபையின் சந்தர்ப்பங்களை, பொன்னான வாய்ப்புகளை அல்லத் தட்டாதே. ஞானமாக அவற்றைப் பயன்படுத்தி உன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்குக் காத்துக்கொள்.

(பத்)

உன் வாழ்வின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரசங்கமே. எனவே உன் கிரியைகள் மூலமாக நீ பிரசங்கிப்பதைக் குறித்து மகா ஜாக்கிரதையாக இரு.

— "Pray"

தேவனுடைய சித்தம் தூக்கிச் செல்லும் பாரச் சுமையல்ல, அமர்ந்து இளைப்பாறும் அழகிய பஞ்சுத் தலையணை.

— "upward"

கர்த்தரில் அன்பார்ந்த தேவ ஜனமே!

பதினாயிரம் பேர்களில் சிறந்தவரும், எந்தப் பாவியானாலும் புறக்கணித்துத் தள்ளாத பரிசுத்தக் கன்மலையாம் நம் நேச இரட்சகரின் இன்ப நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

"உங்களுக்காக, உங்கள் ஊழியங்களுக்காக மிகவும் போராட்டமாய்ப் போராடி ஜெபிக்கின்றேன்" என்று கிறிஸ்துவுக்குள்ளான என் அன்புத் தாயார் ஒருவர் சமீபத்தில் எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அதைப் படித்துப் படித்துக் கர்த்தரில் அக மகிழ்ந்தேன். எத்தனை மகிழ்ச்சிக்குரிய ஆனந்த செய்தி இது! இவ்விதமான இடைவிடா போராட்ட ஜெபங்களே எக்காளத்தின் ஊழியங்களை இம்மட்டாகப் பாதுகாத்து வருகின்றது என்பதைக் கர்த்தருக்குள்ளாக நான் திட்டமாக அறிவேன். இவ்விதமான ஜெபங்களாலேயே எக்காளத்தின் வருங்காலத் தேவ ஊழியங்களையும் தாங்குங்கள் என்று கண்ணீர் நிறைந்த கண்களோடு உங்கள் ஒவ்வொருவரையும் வேண்டி நிற்கின்றேன். இதற்கான கிருபைகளைக் கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் தந்தருளுவாராகவும்.

ஒரு கிறிஸ்தவப் பெற்றோருக்கு ஒரே ஒரு ஆண் மகன் மட்டுமிருந்தான். சற்றும் எதிர்பாரா வண்ணம் அவ்வாலிபன் மரணத்தின் மூலமாகப் பிரிக்கப்பட்டான். பிள்ளையை இழந்த பெற்றோர் அங்கலாய்த்தனர். இவ்வெதிர்பாரா நிகழ்ச்சியால் பிள்ளையின் தகப்பன் பெரிதும் வெகுண்டெழுந்தான். "இயேசுகிறிஸ்து ஓர் கருணையற்றக் கல்நெஞ்சன். எனது ஒரே ஒரு அருமை மகனையும் தட்டிப்பறித்துக் கொள்வதில் அவனுக்கு என்னதான் ஆனந்தம் கிட்டியதோ? இனிமேல் அவனும் வேண்டாம். அவன் மதமும், மார்க்கமும், கோயிலும் வேண்டவே வேண்டாம்" என்ற கோபாவேச வார்த்தைகளோடு கிறிஸ்தவ மதத்திலிருந்து வெளியேறினர் அக்கிறிஸ்தவத்தந்தை. இது கட்டுக்கதையல்ல உண்மைச் சம்பவமே.

அடுத்தக்கோணத்தில் ஓர் கிறிஸ்தவப் பெற்றோருக்கு 6 பிள்ளைகள் இருக்கின்றனர். ஓர் நாள் இரவில் அந்த ஆறுபிள்ளைகளும் மாண்டு மடிகின்றனர். வீடு நிறையப் பிள்ளைகளைக் கொண்டிருந்து அவர்களோடு கொஞ்சி மகிழ்ந்து ஆரவாரித்த அந்தப்பாசமுள்ள தாய் இப்பொழுது வெறுமையாய்க் காட்சி அளிக்கும் சந்ததியற்றத் தன் வீட்டைக்கண்டு அலை அலையாய்க் கண்ணீர் விட்டு அங்கலாய்த்த போதிலும் தன் மாபெரும் நேச இரட்சகரின் மட்டில்லாக் கல்வாரி அன்பை அள்ளி அனுபவிக்க அச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திப் பாடிக்களிக்கின்றார்கள். மட்டுமா, தன் ஜீவிய ஓட்டத்தின் எஞ்சிய பகுதியைத் தன் பரம நாயகருக்கு இன்னும் மாபெரும் தொண்டாற்றி எரிந்து கரைந்து மறைகின்றார்கள். இதுவே மெய்யான தேவ அன்பாகும்.

மெய்க்கிறிஸ்தவ ஜீவியம் பாடுகளாலும், வியாகுலங்களாலும், கண்ணீர்களாலும், வேதனைகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஒன்று

தான் என்பதை யாரும் மறுக்கவியலாது. இவ்வுலகிலிருந்து கடந்து சென்ற பரிசுத்த தேவமக்களின் எண்ணிறந்த வாழ்க்கை வரலாறுகளும், ஜீவியங்களும் இதற்கு ஆதாரமாக உள்ளன. நம் நேசக் கர்த்தரும் கூட "துக்கம் நிறைந்தவராகவே" இவ்வுலகிலிருந்து கடந்து சென்ருர். இவ்வுலகில் உபத்திரவங்களும், சிட்சைகளும் நமக்கு மிகவும் அவசியம் என்று தேவன் காண்கின்ருர். பெரிதும் பாடுகளை அனுபவித்துக் கர்த்தரால் நொறுக்கப்பட்டத் தாவீதரசர் இறுதியில் "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது" (சங். 119:71) என்று கூறியதும் இதையிட்டுத்தான். துன்பங்களைக் கண்டு கர்த்தரை தூஷிப்பதும், தேவ அன்புக்குப் புறமுதுகு காட்டுவதும் கிறிஸ்தவ ஜீவிய வளர்ச்சியின்மையைக் குறிப்பதாயுள்ளது.

நம் தேவன் நல்லவரும், நன்மை செய்கிற கர்த்தருமாயிருக்கிருர். நாம் சிட்சிக்கப்படுவது நமது நித்திய நன்மைக்கேயன்றிப் பிறிதொன்றிற்குமில்லை. நம் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பவர். ஆனபடியினுல்தானே அவர் தம்மையே நமக்காக ஈந்தளித்தார். நமது துக்கங்களிலும், துயரங்களிலும், கண்ணீர்களிலும்கூட அவர் நிச்சயமாகப் பங்குபற்றுகிருர் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். லாசருக்காகக் கண்ணீர் விட்டழுததில் இதைத்தானே நாம் காண்கின்ருேம். அவர் இரக்கமும், மன உருக்கமும் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ள தேவன்.

இவ்வுலகில் மானிடனுக அவரிருந்த நாட்களில் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்த அக்கருணுகர நேசர் கண்ணில்லாத கபோதி ஒருவன்மேல் மனதுருகி அவனுக்குப் பார்வையை இவ்வண்ணமாகவே அவன் கண்களைத் தொட்டுக் கொடுத்திருப்பார் என்பதை நமது ஓவியர் ராஜகுமார் இம்மாத இதழின் அட்டையில் தீட்டியுள்ளார்கள்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக ஆமென்.

நீ நினையாத நேரம்

"மரணம் லஞ்சம் வாங்குவதில்லை" என்று பெஞ்சமின் பிராங்கிளின் கூறினுர். உன் ஜீவன் பிரியும் வேளை வந்தபின்னர் உன் லோக ஆஸ்திகளையெல்லாம் கொடுப்பதாயிருந்தாலும் சாவின் பிடியிலிருந்து ஒருமணி நேரத்தை உன்னுல் பின்னிடப்பண்ண இயலாது. மரணம் தனக்கு லீவு எடுப்பதில்லை. அது எந்த நாளிலும் எந்த மணி வேளையிலும் உன் கதவைத் தட்டக்கூடும். நீ எப்பொழுதாவது கல்லறைத் தோட்டத்திற்குச் சென்று கல்லறைகளில் பதிக்கப்பட்டுள்ள ஞாபகக் குறிப்புகளைக் கவனித்ததுண்டா? சிலரின் வாழ்நாட்காலம் பூரணமாக முற்றுப்பெற்றிருப்பதை அங்கு நீ காணலாம். ஆனுல், ஒரு சில கல்லறைகளில் "நான் இதை எதிர்பார்த்தேன். ஆயினும் இத்தனை சீக்கிரத்தில் இது இருக்கும் என்பதை நான் நினைக்கவே இல்லை" என்ற வாசகத்தையும் கூட நீ காணலாம்.

"அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி. 9:27) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. தனிப்பட்ட ஜீவியங்கள் முழுவதிலும் கணக்குகள் எதிர்பார்க்கப்படுகின்றன. குற்றம் செய்த பிள்ளை விசாரிக்கப்பட்டுத் தகப்பனால் அல்லது தாயால் தண்டனைக்குப் பாத்திரனாகின்றான். பெரியோர் தீங்கிழைப்பார்களானால் விசாரணைக்குட்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள். தவறிழைக்கும் தொழிலாளி அவன் முதலாளியால் தண்டிக்கப்படுகின்றான். இவ்வண்ணமாகவே ஒவ்வொரு மனிதனும் தேவனுக்கும் கூடக் கணக்கொப்புவிக்க நியமிக்கப்பட்டிருக்கின்றான். அந்த நீதிபதி உன் கணக்கைப் பார்த்து "நீ ஒரு பாவி" என்றும், "நீ பாவம் செய்தவன்" என்றும் இருவிதங்களில் உன்னை உற்று நோக்குகின்றார். நீ உண்மையுள்ளவனானால் அந்த நீதிபதியிடம் பரிந்து பேசலாம். ஆனால் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10) என்று வேதாகமம் எச்சரிக்கின்றது "எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்" (23) என்று நம்மெல்லாரையும் அது குற்றஞ்சாட்டுகின்றது. வேதாகமத்தின்படி எடையிடப்படும் ஒவ்வொரு மனிதனும் குற்றவாளியே.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மேலும் தேவ வசனம் கூறுகின்றது, "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோ. 3:16) எத்தனை மகிழ்ச்சியூட்டும் வேத வசனம்! நித்திய ஜீவனையும், நித்திய அழிவையும் இவ்வசனம் நமக்கு முன்பாக வைக்கின்றது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பதையிட்டோ, அல்லது நம்பிக்கை வைக்காமலிருப்பதையிட்டோ இதில் ஒன்றை நாம் தெரிந்து கொள்ளுகின்றோம்.

பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது, "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்" (ரோ. 5:8) இதை மற்றொரு விதத்தில் சொல்வோமானால் "தேவன் உன்னை எத்தனையாய் நேசிக்கின்றார் என்பதை வற்புறுத்த விரும்புகின்றார்" என்பதே. ஆகவே, தேவன் நீ மனந்திரும்பக் காத்திராமல், இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை முன்கூட்டியே உனக்காக அர்ப்பணித்து விட்டார். எனவே உனது இரட்சிப்பின் தாமதம் உனது சொந்தத்தாமதமேதான். தேவனை நோக்கிக் கூப்பிடும் வேளையில்தானே அவர் உடனடியாக உன்னை இரட்சிப்பார்.

சரீரத்தை ஒழுக்க நெறிகளில் பாதுகாத்துக் கொள்வதன் மூலமும், ஏழைகளுக்கு உதவுவதன் மூலமும், அயலகத்தாருக்குத் தொண்டாற்றுவதன் மூலமும் தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ளலாம் என்று ஒருசாரார் எண்ணுகின்றனர். மற்றொரு

வகுப்பினர் ஒரு சபையைப் பின்பற்றிச் செல்வதன் மூலமும் இரட்சிப்பைப் பெறக்கூடும் என்று கருதுகின்றனர்.

ஒருவரும் தங்கள் சொந்தக்கிரியைகளின் மூலமாகவோ, இல்லை, தங்கள் தகுதிகள் மற்றும் குடும்பக் கௌரவத்தையிட்டோ பரலோகத்திற்குச் செல்வது இயலாத காரியம். கர்த்தராகிய இயேசு இறங்கி தனது பாவங்களுக்காக மரித்தார், தனது பிராயச் சித்தத்தை அவர் பூரணமாகச் செலுத்திவிட்டார் என்று முற்றுமாக விசுவாசித்து அதன் மூலம் தனது பாவங்களையும்கூட மன்னிக்க அவரை நோக்கிக் கெஞ்சும் மனிதனே பரலோகம் செல்லவியலும் என்பதை வேதாகமம் திட்டம் தெளிவாக விளக்கியுள்ளது.

"பாவத்தின் சம்பளம் மரணம்", தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23) சம்பள தினம் நிச்சயமாக வரும். இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் வாக்குப்பண்ணியுள்ள நித்திய ஜீவனை நீ சுதந்தரிக்கத் தயங்குவாயானால் உனது பாவத்தின் சம்பளமாகிய நித்திய மரணத்தை நீ பெற்றே தீரவேண்டும்.

ஆகிலும், நற்செய்தி உண்டு! ஆம். இரட்சிப்பு இலவசமான ஈவாக தேவ கரங்களிலிருந்து நமக்குக் கிடைக்கின்றது. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே. 2:8,9) நீ செய்யவேண்டியதெல்லாம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய உனது வேறுபட்ட எண்ணங்களை மாற்றி அவரை உன் சொந்த இரட்சகர் என்று விசுவாசித்து அவர் மூலமாக உள்ள இலவச இரட்சிப்பை ஏற்றுக்கொள்வது தான். இரட்சிப்பு மிகவும் இலவசமானது.

சிலர் "நான் பதினோராம் மணிவேளையில் இரட்சிக்கப்படுவேன்" என்று கூறுகின்றனர். ஆனால், ஐயோ, பாவம்! அவர்கள் பத்தரை மணிக்கே மரித்து விடுகின்றனர். காலதாமதம் மகா ஆபத்தானது. ஒரு கணத்தையும்கூட வீணடிக்காமல் உன் கண்களைமூடி ஆண்டவரோடு பேசு. உன் பாவத்தை விட்டு விட்டு அவருடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நீ ஆபத்த நிலையில் இருப்பதை அவரிடம் சொல்லு. உன்னுடைய ஜெபம் கீழ்க்கண்டவாறிருக்கட்டும்:-

"ஓ என் தேவனே, நான் இரட்சிப்படைய விரும்புகின்றேன். என்னுடைய பாவங்களைத் தயவாக எனக்கு மன்னியும். இங்கேயே, இப்பொழுதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகின்றேன். உம்முடைய கிருபையால் பாவத்திற்கு விலகி நீர் விரும்பும் பாதையில் நான் செல்லுவேன். தேவையான உதவிகளைச் செய்யும், தயவாக என் வாழ்க்கையைச் சுத்திகரித்து என் வார்த்தை, நினைவுகள், கிரியைகளில் நான் ஓர் மெய்யான கிறிஸ்தவனாக விளங்க உதவிச்செய்யும். கர்த்

தராகிய இயேசு கிறிஸ்து தமது சிலுவை மரணத்தின் மூலமாக எனது இரட்சிப்புக்கான பூரண விலேக்கிரயத்தையும் செலுத்திவிட்டார் என்று என்முழு இருதயத்தோடு நான் விசுவாசிக்கின்றேன். இந்த எனது ஜெபத்திற்குப் பதிலளித்த உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்'' ஆமென்.

நீ விசுவாசத்தோடு ஜெபித்தால் தேவன் உன்னே இரட்சிப்பார். ''மரிக்கும் வேளேயில் நான் மன்னிப்புக்காக மன்ருடுவேன்'' என்பது மதியீனம். ''இதுவே அனுக்கிரக காலம், இன்றே இரட்சிப்பின் நாள்'' என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கின்றது. ''இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனே நாளிலும் நடந்ததுபோல உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்''. (சங். 95:8)

மரணம், நீ எதிர்பாராத வேளேயில் உன்னேச் சந்திக்க வருமாதலால் ஒருநாள் காலதாமதமோ இல்லே. ஒரு மணி நேர காலதாமதமோ பயங்கர விளேவுகளே உண்டாக்கிவிடுமாதலால், இந்த வேளேயிலேயே உன் இரட்சகருக்கு முன்பாக முழங்காலூன்றி அவரை ஏற்றுக்கொள். ''என்னிடத்தில் வருகிறவனே நான் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லே''. (யோவா. 6:37) என்று என் நேசர் கூறுகின்ருர்.

(Selected)

இக்காலத்தின் தேவை - 7

(தொடர்ச்சி)

தேவனுடைய சித்தத்தினுலே, இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனுகிய ஜெபராஜ், என் தேவனுடைய சமூகத்தில் தாழ்த்தி, உங்கள் மேலுள்ள அன்பினுலும் வாஞ்சையினுலும், ஆவியானவரால் ஏவப்பட்டு, தேவனுடைய ஆலோசனேகளே எழுதி அனுப்ப இம்மட்டும் கிருபையும், சகாயமும் செய்த பிதாவாகிய தேவனுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாக சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக, ஆமென்.

கடந்த மாதங்களில் நாம் பார்த்தபடி, சபையின் காலம் முடிந்துவிட்டது. இனி எந்த சபையும் அவசியமில்லே. நாம் இயேசுவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் கடைசி சந்ததி தேவனுடைய ஆவி உலகமெங்கும், தேவனுடைய பிள்ளேகள்மேல் ஊற்றப்பட்டு, தீர்க்கதரிசனமும், தரிசனமும், சொப்பனமும் உண்டாகிற காலமாயிருக்கிறது. கடைசி காலத்தில் அறிவு பெருகிப்போம் என்ற தானியேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறி இப்போது ''வீட்டிற்கு ஒரு ஆள் வாசிக்கத்தக்க கிருபையையும், தாய்மொழியிலேயே பரிசுத்த வேத எழுத்துக்களே வீட்டிலேயே வைத்திருக்கும் பாக்கியத்தையும்'' தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். இதற்காகவே தேவன் கல்வியை ஏற்படுத்தினுர்.

அநியாயம் செய்கிறவர்கள் பயங்கர அநியாயக்காரராயும், பாவிகள் கொடிய பாவிகளாயும், பரிசுத்தவான்கள் பூரண பரிசுத்தவான்களாகவும் மாறும் காலம் இது. (வெளி. 22:11) "இது குறுகின காலம்" என்றும் வேதம் சொல்லுகிறது. (1கொரி. 7:29) இக்காலத்தில் "கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்". ஒன்றுக்கும் கவலைப்படாமலும், ஜெபமும் ஸ்தோத்திரமும் பண்ணவேண்டும். (1கொரி.7:35, பிலி.4:6,7) அநேகர் இடறலடையும் காலமும் இதுவே. (மத். 24:10) அநேகர் வஞ்சிக்கப்படும் காலமும் இதுவே. (24:5) கள்ளப் போதகர்களின் கெட்ட நடக்கையை அநேகர் பின்பற்றும் காலமும் இதுவே. (2பேது. 2:1,2) விபசார மயக்கத்தால் நிறைந்தவர்கள் பெருகும் காலமும் இதுவே. (2பேது. 2:13,14,17) உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடிப்பார்களாம். ஆகையால் விசுவாசத்தில் உறுதியாயிருங்கள், ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

பாரம்பரிய நியாயங்கள், உலக வழிபாடுகள், மனுஷருடைய கற்பனைகள், சுய இஷ்டமான ஆராதனைகள் முதலியவைகளால் வஞ்சிக்கப்படாதிருங்கள். (கொலோ, 2:8, 20-23) பாரம்பரியத்தைவிட, தேவனுடைய கற்பனைகளே பிரதானம். (மத். 15:1-9) இனிக் குழந்தைகளாயிராமல், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்களுக்குச் செவி கொடுக்க வேண்டாம். (எபே. 4:14) அன்புடன் வேதவசனங்களை மாத்திரம் கைக்கொண்டு நடவுங்கள். ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளது வசனமே (யாக். 1:21) இயேசுவினிடத்தில் கேட்டு அறிந்து, கற்றுக்கொள்ளுங்கள். (எபே.4:21) "என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்று இயேசு சொல்லியிருக்கிறார். (மத் 11: 29) பவுல் அப்போஸ்தலனுக்கு ஆவியால் வெளிப்படுத்தின இயேசு கிறிஸ்து (கலா. 1:12) தமது தூதனை அனுப்பி வெளிப்படுத்தின விசேஷங்களை எழுத யோவானுக்கு உதவி செய்த இயேசு (வெளி 21:5, 22:16) இயேசு கிறிஸ்துவினால் இக்காலத்தின் இரகசியங்களைக் குறித்து அடியேனுக்கு வெளிப்படுத்தினார். அல்லேலூயா. அவர் பட்சபாதமுள்ளவரல்ல. உங்களுக்கும் இந்த கிருபையைத்தர வல்லமையுள்ளவராயிருக்கிறபடியால் இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரம் விசேஷமாக கொடுத்த போதனை முழுவதிலும் விசேஷமானது "பரிசுத்தாவியின் அபிஷேகமே". உயிரோடெழுந்த பின்பு அதிகமாக சொன்னதும் பரிசுத்தாவிக்கடுத்த வாக்குத்தத்தமே. யோவான் சுவிசேஷம் 14, 15, 16 அதிகாரங்கள் கெத்செமனே தோட்டத்துக்குப் போகும் வழியில் விசேஷமாகக் கொடுக்கப்பட்டது. (யோ. (14:16) சத்திய ஆவியாகிய தேற்றரவாளன், சத்திய ஆவி (வ.17) காரணம் (16:13) சத்தியத்துக்குள் நடத்துவார். ஆவியினாலே சத்

இயத்துக்கு கீழ்ப்படிய முடியும் (1பேது. 1:22) மேலும் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள அன்பை நம்முடைய இருதயத்தில் ஊற்றுவார். (ரோ. 5:5) எல்லாவற்றையும் ஆவியானவரே போதிப்பார். (யோ. 14:26; 1யோ. 2:27).

ஆவியானவர். "நீ போ" என்று போகவேண்டிய இடத்தைக் காட்டுகிறார். (அப். 8:29) தனக்கு இஷ்டமான இடத்திற்கு திடீரென்று வேகமாக கொண்டுபோகிறார். (அப். 8:39; 1ராஜா. 18:12) ஆவியானவர் தரிசனத்தைக் குறித்தும் போதித்து யாருடன் சேர்ந்து போகவேண்டும் என்றும் சொல்லுகிறார் (அப். 10:19, 20) ஊழியத்திற்கு போகவேண்டிய ஆட்களையும் ஏற்படுத்துகிறார். (அப். 13:2) தப்பிதமான இடத்திற்கு போகாதபடி தடைசெய்கிறார் (அப். 16:7) வரப்போகிற காரியங்களைக்கூட தெரிவிக்கிறார் (அப். 20:23; 21:11) பாவங்களைக் கண்டித்து உணர்த்துகிறார் (யோ. 16:8) இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறார் (யோ. 15:26) பரிசுத்த ஆவியானவர் நமக்கும் சாட்சி கொடுப்பார் (எபி. 10:15; ரோ. 8:16) இந்தவிதமாய் தேவனுடைய ஆவியால் நடத்தப்படுகிறவர்களே தேவனுடைய புத்திரராம் (ரோ. 8:14).

நாம் சாட்சிகளாயிருக்க பரிசுத்தாவியின் பெலன் அவசியமாயிருக்கிறது (அப். 1:8) பரிசுத்தமாக்கப்பட பரிசுத்தாவி தேவையாயிருக்கிறது. (ரோ 15:15; 1கொரி. 6:11; 1பேது 1:2; அப். 15:8,9; தீத்து 3:5-7) நம்முடைய ஜீவியத்தைக் காத்துக்கொள்ள பரிசுத்தாவியின் உதவி தேவை. (2தீமோ. 1:14). நம்முடைய சரீரம் மீட்கப்பட அபிஷேகம் தேவை. (ரோ. 8:23; எபே. 4:30) உண்மையாய் ஆராதிக்க ஆவி தேவை. (பிலி. 3:3; யோ. 4:24).

ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரலாம். (எபே. 2:18). ஆவியினாலே வேதவசனங்களை தேடிக் கண்டுபிடிக்கலாம். (ஏசா. 34:16) ஆவியினாலே விடுதலை பெற்றுக்கொள்ளலாம். (2கொரி. 3:17). ஆவியினாலே தேவசாயலாக மறுரூபமாக்கப்படலாம். (2கொரி. 3:18; 1யோ. 3:2) ஆவியினாலே உபத்திரவங்களிலும் சந்தோஷமாயிருக்கலாம். (ரோ. 14:17; 1தெச. 1:6; 2கொரி. 8:2; 7:4). ஆவியினாலே சத்துருவை ஜெயிக்கலாம். (ஏசா. 59:19). ஆவியினாலே நம்முடைய சாவுக்கேதுவான சரீரம் உயிர்ப்பிக்கப்படும். (ரோ. 8:11) ஆவியினாலே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கலாம் (யோ. 3:5) ஆவியினாலே இயேசுவின் சரீரமான சபையிலே சேர்க்கப்படுகிறோம். (1கொரி. 12:13). ஆவியினாலே தேவனுடைய சித்தப்படி ஜெபம் பண்ணலாம். (ரோ. 8:26,27, எபே. 6:18. யூதா 20).

(தொடரும்) சாது ஜெபராஜ்

"பின்னிட்டுப் பார்ப்பதைத் தடுத்தருளும்
கலப்பையின் கைப்பிடி கண்ணீரால் நனைந்தது
அறுவடை அரிவாளும் துருவுற்றுக் கெட்டது. ஆனாலும்
என் இறைவா! என் இறைவா! பின்னிட்டுப் பார்ப்பதைத்
தடுத்தருளும்"

மாண்டு மடிந்து மண்ணில் புதைந்தாலும் எரிந்து பிரகாசிப்போம் - 3

(தொடர்ச்சி)

(கடந்த இரு மாத இதழ்களில் ஏமி அம்மையாரின் அருமைப் பிள்ளைகள் 6 பேர்களின் வாழ்க்கை சாட்சிகளைப்பற்றிக் கவனித்தோம். இம்மாத இதழில் அவர்களின் மோட்ச யாத்திரையைப் பற்றிப் பார்ப்போம்.) மு.த.

என் அருமைப் பிள்ளைகள் 5 பேர் உச்சிதப் பட்டணம் சென்ற வரலாறு

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது". (வெளி. 21:4)

"அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் ......" (ஏசா. 25:8)

இடம்: டார்ஜிலிங்.

1899-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி இரவு நேரம். எங்கும் ஒரே இருட்டு. பெருமழை கொட்டுகின்றது. கொடிய புயல் பேரிரைச்சலுடன் வீசுகின்றது. கற்களும் கூடப்பறந்து செல்லும் அளவிற்குப் புயலின் வேகம் அத்தனை உக்கிரமாயிருந்திருக்கின்றது. இப்புயலும், மழையும் 24 மணி நேரம் நீடித்திருக்கின்றது. டார்ஜிலிங்கில் ஓர் மலைச்சரிவில் கட்டப்பட்டிருந்த இரண்டடுக்கு மெத்தை வீட்டில் என் அருமைப் பிள்ளைகள் ஆறுபேரும், என் பிள்ளையைப் போலிருந்த ஜெசந்த் என்ற வங்காளிப் பிள்ளையும் (Bengali Girl) தங்கியிருந்தனர்.

தாங்கள் தங்கியிருக்கும் வீடு விரைவில் சரிந்து விழப்போகின்றது என்பதையறிந்த பிள்ளைகள் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பெரிதும் முயன்றிருந்திருக்கின்றனர். அவர்கள் வெளியே வந்து பார்த்தால் பெருமழை ஊற்றிக்கொண்டிருந்திருக்கின்றது. மரங்கள் முறிந்து விழும் சப்தமும், மலைப்பாறைகள் நிலைபெயர்ந்து பெரு பாதாளத்தில் விழும் சப்தமும், நெடுகத் தொனித்துக்கொண்டே இருந்திருக்கின்றன. மால் வில்லா (Mall Villa) என்றழைக்கப்பட்ட அவர்கள் தங்கியிருந்த வீட்டின் கீழ்ப்பாகத்திலுள்ள ரஸ்தாவிற்கு வர அவர்கள் முயற்சித்தபொழுது அவர்கள் வரும் பாதையில் மழைத்தண்ணீர் ஓர் நதிபோல் மேட்டிலிருந்து கீழ்நோக்கி விரைந்து ஓடிக்கொண்டிருந்திருக்கின்றது. பெரிய ஆறுபோல் கடும் வேகத்தில் சென்று கொண்டிருந்த அதனைக் கடப்பதும் பிள்ளைகளுக்கு முற்றும் முடியாமற்போகவே வீட்டிற்குத் திரும்பியிருக்கின்றனர். பின்னர்,

விட்டிற்குச் சற்றுத் தூரத்தில் மேல் பாகத்தில் உள்ள மற்றொரு பாதைக்கு ஏற பிள்ளைகள் விரும்பியிருக்கின்றனர். ஆனால் அப்பாதையை அடைய முடியாதபடி மழைத் தண்ணீர் பாதையையெல்லாம் அடித்துக்கொண்டு போயிருந்ததுடன், செல்லவிருந்த பாதையெங்கும் ஆழமான சேறும், சகதியும் படிந்துகிடந்திருக்கின்றது. எந்தத் தைரியவானும் கதிகலங்கிப் போகத்தக்கதான இரவாக அவ்விரவு இருந்தமையால் பிள்ளைகள் அனைவரையும் நோக்கி "பாதுகாக்கப்பட்டால் நிச்சயமாகக் கர்த்தரால் நாமனைவரும் பாதுகாக்கப்படுவோம். இல்லை கர்த்தர் நம்மெல்லாரையும் ஒன்றாகத் தமது ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளட்டும். என்ன நேரிடினும் நாம் எல்லாரும் விட்டிலேயே தங்கியிருப்போம்" என்று மூத்த மகள் விதா கூறி மற்ற பிள்ளைகளை அழைத்துச் சென்றிருக்கிறாள். வீட்டிற்கு வந்த பிள்ளைகள், சிறுபிராயத்திலிருந்தே என் வீட்டிலுள்ள என் சொந்தப் பிள்ளையாக வளர்ந்து வந்த ஜெசதருடன் சேர்ந்து முழங்காலில் விழுந்து கர்த்தர் தங்களைப் பாதுகாக்க மன்றாடியிருக்கின்றனர். சிறிது நேரத்தில் அவ்விடத்தில் வாழ்ந்துவரும் இரண்டு மலைஜாதி மனிதர் வந்து "பிள்ளைகளே நீங்கள் குடியிருக்கும் வீடு சாய்ந்து விழப்போகின்றது வீட்டைவிட்டு ஓடிப்போய்த் தப்பிக் கொள்ளுங்கள்" என்று கூறியிருக்கின்றனர். "எங்களாலானவரை முயன்றுவிட்டோம் தப்ப இயலவில்லை" என்று பிள்ளைகள் பதிலுரைத்திருக்கின்றனர். சற்று நேரத்திற்கப்பால் மீண்டும் யாரோ கதவை தட்டும்சத்தம் கேட்டுக் கதவைத்திறந்துபார்த்தால் இதோ முகமும் சரீரமனைத்தும் காயங்களால் நிறைந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்த மனிதன் ஒருவனைக் கண்டிருக்கின்றனர். அவனும் பிள்ளைகளை நோக்கி "நீங்கள் தங்கியிருக்கும் வீடு விரைவில் விழப்போகின்றது. வெளியே ஓடுங்கள்" என்று கூறியிருக்கின்றான். பிள்ளைகள் அவனை வீட்டிற்குள் கூட்டிச் சென்று அவனுடைய காயங்களைத் துடைத்து, ஒரு போர்வையால் அவன் சரீரத்தை மூடி அனல் அடுப்பின் பக்கத்தில் அவனை இருக்கச்செய்து அவனுக்குச் சூடுண்டாக்கியிருக்கின்றனர். சிறிது நேரத்தில் அவன் வெளியே சென்றிருக்கின்றான்.

பிள்ளைகள் அனைவரும் பின்னர் மெத்தைக்குச் சென்று அங்கே கர்த்தரை நோக்கிக் கண்ணீரோடு மன்றாடியிருக்கின்றனர். ஜெபித்துக்கொண்டிருந்தபோதே வீட்டின் ஒரு மூலைச்சுவர் வெடித்துப் பிளந்திருக்கின்றது. உடனே விதா குதித்தெழும்பியிருக்கின்றாள். "அப்பொழுது அவள் முகம் ஒரு தேவதூதனின் முகத்தைப்போல் பிரகாசித்தது" என்று வில்பர் என்னிடம் கூறினான். "நாங்கள் அனைவரும் அப்பொழுது வெகு சந்தோஷமாக இருந்தோம். மரணத்தைப் பற்றிய பயம் எங்களனைவரையும் விட்டுப் பூரணமாகச் சென்றுவிட்டது. மோட்ச பட்டணத்தை நோக்கி நாங்கள் துரிதமாகப் பயணம் செய்துகொண்டிருக்கின்றோம் என்ற பரிசுத்த உணர்வு எங்களுக்குண்டானது. இந்நேரத்தில் அப்பாவும், அம்மா

வும் நம்மோடிருந்தால் எத்தனை சந்தோஷமாக இருக்கும். நாம் எல்லாரும் ஒன்றாகச் சந்தோஷத்துடன் மோட்சத்திற்குப் போகலாமே என்று நாங்கள் நினைத்தோம். அம்மா விதா அக்காவுடைய முகத்தை அன்று நீங்கள் கண்டிருந்தால் எத்தனை ஆச்சரியப்பட்டிருப்பீர்கள் தெரியுமா?" என்றும் வில்பர் மேலும் கூறினன்.

பின்னர் விதா பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு அடுத்த அறைக்குச் சென்றிருக்கின்றாள். அங்கே பிள்ளைகள் அனைவரும் மீண்டும் முழங்காலூன்றி ஜெபித்திருக்கின்றனர். ஜெசுதர் என்ற அந்த வங்காளிப் பிள்ளையும் தன் கரத்தைக்கூப்பி வானத்திற்கு நேராகத் தன் தலையை உயர்த்தி "ஓ இரக்கமுள்ள ஆண்டவரே, இப்பொழுதே எங்களை உம்மண்டை சேர்த்துக்கொள்ளும்" என்று கூறியிருக்கின்றாள்.

இதற்குப்பின் சிறிது நேரத்தில் வீடு அப்படியே பெரும் நிலச்சரிவில் சாய்ந்து அது இருந்த இடம் எங்கே என்ற உருத்தெரியாமல் மண்ணில் புதைந்து மறைந்திருக்கின்றது. வில்பரைத் தவிர மற்ற 5 பிள்ளைகளும் ஜெசுதரும் நொடிப்பொழுதில் அலங்கார வாசல் வழியாக உச்சிதப் பட்டணத்திற்குள் பிரவேசித்துவிட்டனர்.

பிள்ளைகளுக்கு நேர்ந்த கடைசிநேரச் சம்பவங்களை எங்களிடம் சொல்லும் படியான ஒரே ஒரு காரணத்திற்காகக் கர்த்தர் வில்பரைமட்டும் எட்டு தினங்களுக்கு எங்களுக்குத் தந்திருந்தார். இதில் ஒரு சொல்லொண்ணு அதிசயமான காரியம் யாதெனில், நான் வில்பர் சுகமடைந்து நீண்ட ஆயுளுடையவனாய் ஜீவிப்பான் என்ற நம்பிக்கையில் கல்க்கத்தாவிலிருந்து டார்ஜிலிங் வந்தவுடன் வில்பர் அக்கடைசி நேர நிகழ்ச்சிகளைக்கூற விரும்பிய போது "மகனே அவற்றை இப்பொழுது சொல்ல அவசியமில்லை. நீ சுகமடைந்ததும் அம்மாவிடம் சொல்லலாம்" என்றேன். அவனே என்னிடம் மிகவும் தயவாகக் கெஞ்சி சகல சம்பவங்களையும் அன்றைக்கே கூறிவிட்டான். அடுத்தநாளே பிள்ளைக்கிருந்த கொடிய காயங்களின் காரணமாக வில்வாத ஜன்னி (Tetanus) ஏற்பட்டுப் பேசமுடியாமல் போய்விட்டது. அவன் மரிக்கும் வரை அதே நிலையில் தானிருந்தான். எல்லாக் காரியங்களையும் மகா ஞானமாய்ச் செய்து தமது நாமத்தை மகிமைப்படுத்திய என் நேச கர்த்தருக்கே துதியும், ஸ்தோத்திரமும் இன்றுமென்றும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

என் மகன் வில்பரின் மோட்சப் பயணம்

டார்ஜிலிங்கிலிருந்து எங்களுக்குக் கிடைத்த முதல் தந்திச் செய்தியில் நிலச்சரிவின் காரணமாகப் பிள்ளைகள் 5 பேர் மடிந்துவிட்டனர். வில்பர் மட்டும் தப்பிப் பிழைத்துக்கொண்டான் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், அவனுக்கேற்பட்டிருந்த மரணக்காயங்களைப்பற்றிய செய்தி தெரியாமற்போகவே அடுத்த புகைவண்டியிலேயே அவன் கல்கத்தா வந்து சேர்ந்துவிடுவான் என்று

ஆவலுடன் எதிர்நோக்கினேம். ஆனால் மரணத்தின் விளிம்பில் அவன் இருப்பதை அவனை நேரில் கண்டபின்னர்தான் அறிய முடிந்தது. மரணப்படுக்கையில் கிடந்த வில்பரின் முகம் வெகுபிரகாசமாயிருந்தது. எங்களைக் கண்டவுடன் பிள்ளை ஏங்கி, ஏங்கி அழுதான். அவன் கண்ணீரைத் துடைத்து அவனை ஆறுதல் படுத்தினேம். அவன் தலையில் ஏற்பட்டிருந்த காயம் மகாபெரியதாயிருந்தது. நாங்கள் போய்ச் சேர்ந்த முதல்நாளில் அவன் நன்ருக இருந்தான். "அம்மா, ஆண்டவர் ஏன் இத்தனை கொடிய வேதனையை எனக்குக் கொடுத்திருக்கிருர்?" என்று என்னைக்கேட்டான். "ஆம். என் அருமை மகனே உன்னைச் சுத்திகரிப்பதற்குத்தான் இவ் வேதனை. அமைதியாக இரு. துன்பமில்லாத ஓர் நாடுண்டு. கர்த்தர்தாமே இக்கொடிய வேதனையைத் தாங்கிக்கொள்ளத்தக்கதான தமது கிருபையை உனக்குத் தந்தருள நாங்கள் ஜெபிக்கின்ருேம்" என்றேன்.

அவன் கட்டிலிருந்த என்னை வேளா வேளைகளில் அவன் தனது கைகளை என் கழுத்தைச் சுற்றிப்போட்டுத் தனது தலையணையின் பக்கமாக என் தலையைச் சாய்த்து "எனக்கு மிகவும் அருமையான தாய்" என்றுகூறி என் கன்னங்களைத் தனது கைகளால் தடவினன். அவன் அப்பா அவனைப் பார்த்து "மகனே நீ உன் அக்காமார்கள் விதாவையும் லூயிசையும் மோட்சப் பட்டணத்தில் கண்டால் எங்கள் அன்பை அவர்களிடம் சொல்லு" என்று கூறினர்கள் "அப்படியே சொல்லுகின்றேன் அப்பா, ஆனால் நான் இப்பொழுதே அங்கு போகப் போகின்றேன் என்று ஏன் சொல்லுகின்றீர்கள்?" என்ருன். "இல்லை மகனே உன் காயம் அத்தனை பெரியதாயிருப்பதினல் தான்" என்ருர்கள். "அப்படியானல் எனக்குச் சுகம் கிடைக்க ஜெபியுங்கள்" என்ருன். "மகனே, இயேசு உன்னேடிருக்கிருரா?" என்று நான் கேட்டேன் "நிச்சயமாகவே அவர் என்னேடிருக்கிருர். நான் மரிப்பதற்கு அஞ்சவேயில்லை. நீங்களும், அப்பாவும் பயப்படுகின்றீர்களோ?" என்று அவன் திருப்பிக்கேட்டான்.

பின் வந்த ஓரிரு இரவுகளில் தலையில் ஏற்பட்டிருந்த காயங்களின் காரணமாக இளைப்பாறுதலில்லாமல் துடி, துடிக்க ஆரம்பித்தான். சற்று உறங்குவான். பின்னர், கொடிய வேதனை காரமாகக் கீச்சிட்டுப் புலம்பி அழுவான். ஆயினும், காயங்களின் வேதனை சற்று குறையுமானல் அவன் முகம் பிரகாசிக்கும். மரணத்தின் கொடிய வேதனையை மிகப்பொறுமையோடு சகித்துக் கர்த்தரில் ஆனந்தக் களிப்புடன் காணப்பட்டான்.

வேதப்புத்தகத்திலிருந்து அவனுக்குப் பிரியமான "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான்

உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்..........." (யோ. 14:1-3) என்ற வசனங்களை மரிப்பதற்கு இரண்டு நாட்களுக்குமுன் ஒரு சாயங்கால வேளையில் தனக்கு வாசித்துக் காட்டச்சொன்னான்.

அன்று இரவு நேரம். ஏறத்தாழ எட்டு நாட்கள் வில்பரினிமித்தம் சரியான இளைப்பாறுதலின்மை, ஆகாரம் உண்ண மனமின்மை காரணமாக நானும் என் கணவரும் பெரிதும் சோர்ந்து கொடிய கிலேசத்திலிருந்தோம். "இன்று இரவே நிச்சயம் வில்பர் மரித்து விடுவான். நீங்கள் இருவரும் இனி சற்று போய் இளைப்பாறுங்கள். வில்பர் இறந்தவுடன் உங்களை அழைக்கின்றோம்" என்று அவனுக்கு மருத்துவ சிகிட்சை அளித்த ஓர் சகோதரி எங்கள் இருவரையும் வற்புறுத்திப் பக்கத்து அறைக்கு அனுப்பிவிட்டார்கள். "வில்பர் இன்று மரித்துப்போவான்" என்று அவர்கள் சொன்ன வார்த்தை என்னை உயிரோடே கொன்றது. நான் ஓர் செத்த பிணம்போல் என் கட்டிலில் விழுந்தேன். கர்த்தரின் மட்டற்ற கிருபை என்னைத் தாங்காமலிருந்திருந்தால் நான் அன்று உயிர் பிழைத்திருக்க முடியாது. இந்நிலையில் கர்த்தரே என் சமீபமாய் வந்ததை நான் கண்டதுடன், மோட்சப் பட்டணத்தின் மகோன்னதக் காட்சிகளையும், அங்குள்ள மகிமைகளையும்கூட நான் காணமுடிந்தது. அதில் என் மகன் வில்பர் மோட்சப் பட்டண வாசலுக்குள் பிரவேசிப்பதையும் அவனுடைய சகோதர சகோதரிகளான மற்ற என் அருமைப் பிள்ளைகள் அவனை மட்டற்ற மகிழ்ச்சி ஆரவாரத்துடன் எதிர்கொண்டழைக்க வந்ததையும், அவர்கள் அவனைத் தழுவிப்பிடித்துக்கொண்டு மோட்சப்பட்டணத்திற்குள் கூட்டிக்கொண்டு சென்றதையும் கண்ட ஆனந்தத்தில் நானும் அவர்கள் வெற்றி ஆரவாரத்தில் மூழ்கிக்களித்து உள்ளம் சந்தோஷத்தால் பொங்கிவழியும் நிலைக்கு வந்துவிட்டேன். இந்த உன்னத தரிசனத்தின் முடிவில் "வில்பர் மரித்துப்போனான்" என்ற செய்தி எங்களுக்குக் கூறப்பட்டது. பின்னர் நான் கலங்கவில்லை. இந்த ஒரே ஒரு காட்சிதான் இந்நிகழ்ச்சிக்குப்பின் வந்த மகா கொடிய துயரப்பள்ளத்தாக்குகளில் என்னைத் தாங்கிக் கர்த்தரின் அன்பில் அசையாமல் நிலைத்திருக்கச் செய்தது. அல்லேலூயா.

வில்பரின் சரீரத்தைக் கல்லறைத் தோட்டத்திற்கு நாங்கள் கொண்டு சென்றபோது மேகக்கூட்டங்கள் சூரியனை மறைத்து மப்பும், மந்தாரமாகவிருந்தது. ஆனால் சரீரத்தை மூடிய பிரேதப்பெட்டியைக் கல்லறையினுள் தாழ்த்தியபோது சூரியன் மேகக்கூட்டங்களைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்து வெகு பிரகாசமாகத் தென்பட்டது. அதன் ஒளி வில்பரின் பிரேதப்பெட்டியிலும் பட்டது. அதைக்கண்ட என் உள்ளம்:-

மரணமே உன் கூர் எங்கே?
பாதாளமே உன் ஜெயம் எங்கே?

என்று ஆரவாரித்தது.

இவையெல்லாவற்றிலேயும், நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்.

அருமைப்பிள்ளைகள் ஆறுபேர்களின் மரணத்திற்குப்பின் வந்த சிலமாதங்களாகப் பிசாசு என்னை வெகுவாகச் சோதித்தான். நான் கர்த்தரை நோக்கி ஜெபிக்கும் போதெல்லாம் அவன் என்னண்டை வந்து "உன் ஜெபத்தினால் வந்த பயன் என்ன? அது என்னத்தைச் செய்யக்கூடும்? என்றே சொல்லி வந்தான். உன் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தேவ ஊழியத்திற்கும், மிஷனெரிப்பணிக்கும் அர்ப்பணித்தாயே அவர்கள் அனைவரும் இப்பொழுது எங்கிருக்கின்றார்கள்?" இவ்வண்ணமான கேள்விகளை அவன் என் காதுகளில் போட்டுக்கொண்டே இருந்தது என்னால் தாங்கமுடியாத துயரமாயிருந்தது. அவனை எதிர்த்துப்போராட என்னில் சக்தியில்லை என்பதை உணர்ந்த நான் கர்த்தர்மேல் என் னை வீசி எறிந்து இளைப்பாறினேன்.

டார்ஜிலிங்கில் எங்களுக்கேற்பட்டக் கொடிய அடிக்குப்பின் நாங்கள் எங்கள் மிஷனெரிப் பணியைக் கைவிட்டுவிட்டு எங்களுடைய வியாகுலத்தால் அழிந்துபோய்விடுவோம் என்று எண்ணினோர் அநேகர். ஆனால் நடந்தது வேறு. மேற்கண்ட நடபடிகளுக்குப் பின் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக மாறினார். அவருடைய அளவிட முடியாத கிருபைத்திரட்சியினால் நான் பெலத்தின்மேல் பெலன் அடைந்து கர்த்தரையும் அவரது அன்பையும் வாஞ்சித்துக் கதறினேன். அவருடைய வேதத்தின் வாக்குத்தத்தங்கள் எனக்குப் புதிய விதத்தில் ஆறுதலையும், நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அளிக்க ஆரம்பித்தன. எல்லாவற்றிற்கும் மேலாகத் தேவனுடைய திருச்சித்தம் என் வாழ்வில் நிறைவேறுகிறதற்காய் என் இரட்சகரை ஸ்தோத்திரிக்கிறேன். "இதோ நான் உன்னோடிருக்கிறேன்" என்று கூறிய நேச கர்த்தருக்கு என்னை ஒப்புவித்து என் வருங்காலங்களை அவருடைய ஆளுகைக்கு ஒப்படைக்கின்றேன். என் அருமை நேசருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென். அல்லேலூயா.

(முற்றும்)

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஒரு ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது இப்பூவுலகின் எந்தச் சபைப்பிரிவையும் சார்ந்த ஓர் பத்திரிக்கையல்ல. ஆண்டுச்சந்தா ரூ. 2 மட்டுமே அனுப்பவேண்டிய முகவரி:

DEVA EKKALAM
Kilmelfort Estate
Kotagiri - 643217
NILGIRIS, S. India.

என் பாவத்திலிருந்து யார் என்னை விடுவிப்பார்?

ஓர் சாட்சி

ஒரு சிறிய கிராமத்தில் ஒரு ஏழை இந்துப் பெற்றோருக்கு மகனாக நான் பிறந்தேன். என் பக்தியுள்ள தந்தை இந்துப் புண்ணிய ஸ்தலங்களுக்குத் தவறாமல் யாத்திரை செய்வது வழக்கம். என் தந்தையின் இச்செயல்கள் மனிதன் கடவுளைக் காண எவ்வளவாக வாஞ்சிக்கின்றான் என்ற அறிவை எனக்கு உணர்த்தியதுடன் அல்வித நாட்டத்தில் என்னையும் ஈடுபாடு கொள்ளச் செய்தது. எனது ஊர் அரசாங்கப் பள்ளியில் நான் சிறுவனாகப் படித்துக்கொண்டிருந்த போது இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால் அந்த அறிவு மிகவும் அற்பமானது. இதன் பின்னர் எனது பெற்றோரைக்கூட நான் கலந்தாலோசிக்காமல் 1933-ஆம் ஆண்டு கால்நடையாக 40 மைல்கள் நடந்து வந்து பல்தானா என்றவிடத்திலுள்ள கிறிஸ்தவ மிஷன் பாடசாலையில் வந்து சேர்ந்தேன். இங்கேதான் நான் கர்த்தராகிய இயேசுவைப்பற்றி அதிகமதிகமாக நான் அறிந்துகொள்ள முடிந்தது. இந்தப் பள்ளியில் ஆண்டுதோறும் நடைபெறும் வனமுகாம் ஆவிக்குரிய கூட்டங்களில் கர்த்தர் அதிசயமான பிரகாரமாக என் இதயத்தைத் தொட ஆரம்பித்தார். வார்த்தைகளைக் கொண்டு நான் அந்த உன்னத அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள வியலாத பாவியாயிருக்கின்றேன். என்னிருதயம் ஓர் அசாதாரணமான அனுபவங்களை எனக்குள்ளே அந்நாட்களில் அனுபவித்தது. இந்நிலையில் எனது மூத்த சகோதரன் திடீரென்று மரித்துப்போகவே உடனடியாக நான் பள்ளிக்கூடத்தை விட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. குடும்பத்தைப் போஷிக்கும் உத்திரவாதமும் எனக்குண்டானமையால் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டாக எனது ஊருக்கு அருகாமையிலுள்ள ஓர் பள்ளியில் ஆசிரியனாகப் பணிபுரிந்தேன். எனக்கு அங்கு நல்ல சம்பளம் கிடைத்ததுடன் குரு தேவர் என்ற புகழ் மாலையையும் மக்கள் எனக்குச் சூட்டினார்கள்.

ஆனால், இந்நாட்கள் ஒன்றின் இரவில்தான் நான் கண்ட ஓர் காட்சியால் என் மனதைப் பயம் சூழ்ந்தது. என் சரீரம் வியர்வையால் நனைந்து குளிர்ந்து போயிற்று. நான் நித்திரை செய்துகொண்டிருந்தபோதல்ல, நான் நித்திரையிலிருந்து விழித்திருந்த வேளையிலேயே அந்தக் காட்சியைக் கண்டேன். அக்காட்சியில் எனக்கு முன்பாக ஓர் திரையில் காண்பதைப்போல் பெரிய எழுத்துக்களில் கீழ்க்கண்ட இரண்டு கேள்விகள் எழுதப்பட்டிருந்தன.

என் பாவத்திலிருந்து யார் என்னை விடுவிப்பார்?
கிறிஸ்துவேயல்லால் வேறு யார் அதை சுத்திகரிப்பார்?

இதைக் கண்டவுடனேயே கடந்து சென்ற என் பாவங்களைக் குறித்த உணர்வு எனக்குள் வரவே நான் துயரங்கொண்டு அழுதேன்.

உடனே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எனக்கு வெகு சமீபத்தில் வந்து "பயப்படாதே, இதுமுதல் நான் உன்னோடிருப்பேன்" என்ற வார்த்தைகளால் என்னைத் தேற்றினர். எத்தனை பெரிய ஆனந்தம் அன்று என் இதயத்தில் பிரவேசித்தது தெரியுமா? அடுத்தநாளே நான் என் ஆசிரியப் பணியை ராஜினமா செய்துவிட்டு எங்கள் ஊர் பாதிரியாரிடம் வந்து "நான் இயேசுவின் சீடனாக விரும்புகின்றேன்" என்று கூறினேன். இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறும் ஓர் இந்து எவ்வண்ணமாகத் தன் கிராமத்தில் நிஷ்டூரங் களுக்குள்ளாவான் என்பதை நன்குணர்ந்த பாதிரியார் என்னை மேகார் என்றஇடத்திற்குச் சென்று அங்கு ஞானதீட்சை பெற்றுக் கொள்ள எனக்கு ஆலோசனை கூறினர். அவ்வண்ணமே நானும், எனது மனைவியும் வெகு இரகசியமாக 20 மைல்கள் கால்நடையாக நடந்து மேகார் வந்து 1939-ஆம் ஆண்டு நாங்கள் இருவரும் ஞான தீட்சை பெற்றோம்.

சில காலத்திற்குப் பின்னர் நாங்கள் இருவரும் எங்கள் சொந் தக் கிராமத்திற்கு வந்தோம். நாங்கள் கிறிஸ்தவர்களாகி விட்டதை என் பெற்றோரும், பெந்து மித்திரரும் எப்படியோ அறிந்திருந்தார் கள். என் தகப்பனும், என் தாயும் வீட்டில் நாங்கள் எங்கள் பாதங்களை வைக்காதபடித் தடுத்தனர். "உங்களை நீங்கள் கறைப் படுத்திக்கொண்டீர்கள், ஆனல் முழுக்குடும்பமும் உங்களால் கறைப் பட்டுப் போக நாங்கள் அனுமதியோம்" என்று என் பெற்றோர் கூறினர். முதல்நாள் இரவில் ஊருக்கு வெளியேயுள்ள அகன்ற வீதியில் ஆகாரமின்றி நாங்கள் தூங்கினோம். பின்னர் எங்கள் கிராமத்தின் கடைக்கோடிப்பகுதியில் குடியிருக்க ஒரு இடம் கிடைத் தது. நாங்கள் குடிப்பதற்காகத் தண்ணீருக்கு ஊருக்கருகிலுள்ள ஆற்றங்கரையில் ஓர் ஊற்றைத்தோண்டித் தண்ணீர் எடுத்தோம். வேளா வேளைகளில் எங்கள் கிராமத்தார் எலும்புகளையும், மற்ற அசுத்தங்களையும் வீசி நாங்கள் அந்நீரைப் பருகவிடாமல் பண்ணி னர்கள் நாங்கள் பொறுமையோடு அவ்வசுத்தங்களை அப்புறப் படுத்தி மீண்டும் அதை உபயோகிக்கலானோம். ஊரிலுள்ள ஒருவ ரும் எங்களைப் பார்க்க வருவதில்லை. எங்கள்மேல் இரக்கப்பட்டு எங்களைத் தங்களுடன் உணவுண்ண அழைத்தவர்களும் குஷ்டரோ கிகளைப்போல் எங்களுக்கு உணவு பரிமாறினர். இவ்விதமான மகா இக்கட்டான காலங்களில் பரிசுத்த வேதாகமத்திலிருந்தே நான் ஆறுதலையும், சமாதானத்தையும் பெற்றேன். தேவன் என்னிதயத் தில் தந்த சொல்லிமுடியாத சந்தோஷத்தின் காரணமாக என் சொந்த ஜனங்களினல் எனக்குண்டான உபாதைகள் எனக்கு ஒன்று மற்றதாய்த் தெரிந்தன. பின்னர் நான் 5 ஆண்டுகள் திருப்பணி விடைக்கான கல்வி பயின்று கர்த்தருக்கான ஓர் ஊழியக்காரனானேன்.

இதற்குப்பின்னால் வந்த என் கிறிஸ்தவ வாழ்க்கையில் தோல் விகளும், வீழ்ச்சிகளும் நிறைந்து காணப்பட்டன. அழியும் ஆத்து மாக்களைப்பற்றிய அன்பும், கவலையுமின்றி நான் காணப்பட்டேன்.

எனது வெற்றியிழந்த, ஸ்திரத்துவமற்ற வாழ்க்கை எனக்குப் பெரிதும் மனக்கிலேசத்தை உண்டுபண்ணியது.

1952 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் தேதியை நான் என்றும் மறக்கமாட்டேன். அன்றிரவு என் மனைவியும், குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தனர். எனக்கிருந்த நெஞ்சு பெலவீனத்தின் காரணமாகப் படுக்கையிலிருந்து எழும்பி முழங்காலூன்றி நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். எனது வருங்காலம், தோல்வியுள்ள எனது கிறிஸ்தவ ஜீவியம், மரணத்தைப்பற்றிய பயம் போன்றவற்ருல் நான் நடுங்கிக்கொண்டிருந்தேன் எனது உதடுகள், மெய்யான என் விண்ணப்பங்களைத் தேவனுக்குத் தெரிவித்த வண்ணமே அமைதியாக அசைந்து கொண்டிருந்தன. ஏற்கெனவே நான் என் கடந்தகாலப் பாவங்களைக் கர்த்தரிடம் அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றிருந்தபோதிலும் எனது ஸ்திரமற்றக் கிறிஸ்தவ ஜீவியத்திற்கும், வீழ்ச்சிகளுக்கும் ஒரே காரணம் என்னில் மறைந்திருக்கும் மாமிச சுபாவமே என்பதை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தியதுடன் "வெற்றியுள்ள வாழ்வை நீ வாஞ்சிப்பாயானல் உன்னை முற்றும் எனக்கொப்புவி" என்று பரிசுத்தாவியானவர் என்னில் பேசினர். அந்நிமிஷமே நான் ஆவியானவரின் ஆலோசனைக்குச் செவிகொடுத்தேன். என்னைத் தாழ்த்தினேன். ஒப்புக்கொடுத்தேன்.

என்ன ஆச்சரியம்! உடனடியாக என்னிதயத்தில் பரிசுத்தாவியானவரின் உன்னத ஆளுகை ஏற்பட்டது. தேவ ஆவியின் பெலனல் என்னிதயம் பெலன் கொண்டு களிகூர்ந்தது. என்னில் இதுகாறும் வீழ்ச்சியை உண்டுபண்ணிய சத்துரு ஓடிமறைந்தான். ஓ! எத்தனை பெரிய ஆவியின் அபிஷேகம்!! அளவிடமுடியாத விதத்தில் அன்று நான் பெற்றேன். நான் முழங்காலூன்றியிருந்த அந்த எனது அறை பரலோகத்தின் வாசல்களாக மாறிவிட்டது. அல்லேலூயா! அந்நிமிஷத்திலிருந்துதானே என் தேவனுக்கு நான் ஆற்றும் ஊழியத்தில் ஒரு பெரிய சந்தோஷத்தை நான் கண்டேன். உலகப்பிரகாரமான எந்த வேலையும் அளிக்கமுடியாத ஓர் ஒப்பற்ற ஆனந்தக் குதூகலத்தை என் பரம தந்தையின் ஊழியத்தில் கண்டு களிகூருகின்றேன்.

நாள் ஒன்றுக்கு 30 மைல்கள் தூரம் வரை சைக்கிளில் சென்று தேவனது மகிழ்ச்சியின் தூதுகளை மக்களுக்குச் சொல்லிவருவது எனக்கு எத்தனை இன்பமளிக்கிறது? எரிக்கும் கோடைக்கால வெயிலில் மக்கள் அமைதியாக மணிக்கணக்கிலிருந்து என் வாயிலிருந்து புறப்படும் தேவ சத்தியங்களைக் கவனித்துக் கேட்பதை நான் இப்பொழுது எண்ணுகையில் பெரிதும் ஆச்சரியமடைகின்றேன். இதுவே ஆவியானவரின் மெய்யான கிரியை. இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே உன்னையும் கர்த்தர் இவ்வித அனுபவத்திற்குள் வழிநடத்துவாராகவும். ஆமென்.

(Rev. பன்ஸாட்)

Courtesy: "L. L."

என்னைத் தூக்கி எடுத்தார்

"பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கி எடுத்தார்" (சங். 40:2)

பயங்கரமான குழி! உளையான சேறு!! பாவத்தின் படுகுழி!!! அங்கே சேறும் சகதியுந்தான். அந்த உளையில் கால்கள் அமிழ்ந்து போகின்றன. நிற்க நிலையில்லை, கால்தூக்கி வைக்க இடமில்லை. சேறு, சகதி, சதுப்பு. சறுக்கல், வழுக்கல், இருள், பயம், மோசம்! எத்தனை தீர்மானஞ் செய்தாலும் பாவத்தை விட்டுவிட முடியவில்லை. பாவக் குழியிலிருந்து நாம் ஏற முடியாது, தூக்கிவிடப்படவேண்டும்.

"ஒரு மனிதன் தன் பாவப் பழக்கங்களை விட்டுவிட வேண்டும் என்று விரும்பினன். இனி பொய் சொல்லமாட்டேன், தூஷணம் பேசமாட்டேன், கெட்ட நினைவுக்கு இடங்கொடேன் என்று தீர்மானித்தான். ஆனாலும், அவனால் கூடவில்லை. என்ன செய்கிறது? என்று அங்கலாய்த்தான். ஒரு சொப்பனங் கண்டான். அந்தச் சொப்பனத்தில் ஒருவன் படுகுழியில் கிடக்கிறான். அவன் கால்கள் சேற்றில் அமிழ்ந்து போகின்றன. உயர ஏற வெகுவாகப் பிரயாசப்பட்டான். திரும்பவும் விழுந்துவிட்டான். என்ன செய்யலாம்? என்று இருக்கும் போது மேலே ஒரு வெளிச்சம் தெரிந்தது. அதை நோக்கிப் பார்க்கவே, வர வர உயர எடுத்துக்கொள்ளப்பட்டான். மேலே தரை மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டான். யோசித்தான், இதுதான் சமயம் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தரையில் தாண்டி நிற்பேன். இனி மோசம் இல்லை என்று நினைத்தான். அதிகப் பிரயாசத்தோடு பாய்ந்து குதித்தான், ஆனால் ஐயோ! தரையில் சேராமல் குழியிலே விழுந்து முன்போலவே சேற்றில் கிடந்தான் இன்னும் அந்த வெளிச்சம் மேலே நிற்கிறது. அதைத் திரும்பி நோக்கிப் பார்க்கவே மறுபடியும் உயர எடுத்துக்கொள்ளப்பட்டான். யோசித்தான். முந்தி மோசம் வந்ததே! இனி நான் பாய்ந்து குதிக்கமாட்டேன். அந்த வெளிச்சத்தை மாத்திரம் நோக்குவேன் என்று நம்பிக்கையோடு அந்த வெளிச்சத்தையே பார்த்துக்கொண்டே இருந்தான். சீக்கிரம் தூக்கி எடுக்கப்பட்டுக் கன்மலையின்மேல் நிறுத்தப்பட்டான். நித்திரை தெளிந்து சொப்பனம் என்று அறிந்துகொண்டான் ஆனால் சங்கதி அவன் மனதில் பட்டது. என் முயற்சியினாலே முடியாது. பரம வெளிச்சமாகிய இயேசு இரட்சகரை நோக்கிப் பார்த்து அவரை முற்றிலும் நம்பி என் காரியத்தையெல்லாம் அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று உணர்ந்தான், ஒப்புக்கொடுத்தான்; பாவத்திலிருந்து தூக்கி எடுக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டான். ஆ! பாருங்கள்! பாவச் சேற்றிலிருந்து இரட்சிக்கப்பட்டுத் துதிக்கிற

தூங்கும் விசுவாசியைத் தாலாட்டுப் பாடித் தூங்க வைப்பதில் பிசாசு எக்காலத்திலும் சோம்பல்பட்டதே கிடையாது.

—Bible Friend

வதைக் காணப்படுகிறான். சிநேகிதனே! நீ எங்கே? உலக சிந்தை, பாவக் கிரியை, அசுத்தம், அழுக்கு இவைகளில் அமிழ்ந்து கிடக்கிறாயா? இன்னும் கவலையின்றியே நின்று புதுப்பாட்டுப் பாடுகிறாயா?

நோக்கிப்பார்! இரட்சிப்பார்!!

எந்தப் பாவியாகிலும்
தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார்! இரட்சிப்பார்!!

அழைக்கிறார் நேசர்! அவர் பணி ஆற்று!!

விண்ணின் மகிமையில் வீற்றிருக்கும் இயேசு
  எவரும் அழிவதை விரும்பாத அன்பர்
கண்டார் வீழ்வுற்ற உலகை இரங்கி
  தந்தார் தம்மையும் உயிரை நேசர்
கண்முன் அழிகின்றார் கணக்கற்ற மக்கள்
  உள்ளம் உடைகின்றார் தாங்கொணாச் சுமையால்
மன்றும் பாவம் தவிர்த்து இரட்சிக்கும்
  இயேசுவை அறிவிக்க ஒருவரும் இல்லை.

மனிதன் ஆனார்; பாடுகள் பட்டார்
  இழந்ததைத் தேடவும் தேற்றவும் வந்தார்
நம் துயருற்று நிந்தை சுமந்தோர்
  இனிதாய் நலம்பெற மாற்றம் அளித்தார்
மனிதரின் அழிவை, இரவின் வரவை
  நாட்கள் கடப்பதை அறிந்தோர் சிலரே.
கனிவாய் உன்னை அழைக்கிறார் அறுக்க
  ஆன்மாக்கள் பெறுவாய் ஆதாயம் ஆக.

மகிழ்ச்சியை நுகர உலகில் நிலைக்க
  உண்டு நேரம்; இயேசுவுக்கில்லை
மக்கள் பசியை நீக்கிடும் பணிக்கு
  நேரம் இல்லை மடிவோரை உயர்த்த.
துன்புற்றழிகிறார்; அழைக்கிறார் கேளீர்!
  நுங்கள் மீட்பரை கொணர்க எங்களுக்கு
வன் சுமை அழுத்த சோர்வுற்றோம் எங்கள்
  கண்களும் மங்கின அழுகையின் மிகுதியால்.

ஒருவரும் அழிவது அவர் சித்தமல்ல
  யாரும் மீட்பர் அழிவை நோக்கி
ஒருவன் விரையக் கண்டபின் இனிதாய்
  வாழத் தகுமோ? இது தகுமன்றோ?
மருகிச் சாகின்றார் நிரந்தரம் மக்கள்
  மன்னிப்பும் மெய்மை தந்திடும் புத்துயிர்
உருத் தரியும் நித்திய மதிப்பை
  நினைத்து வாழ், உலக மாயையை விட்டொழிக்க.

(ஜூலி ஆர். அமயர்)

Edited and Published by N. Samuel, Kilmelfort Estate, Kotagiri P.O., Nilgiris, and Printed at the Theodan Press, Newport Street, College Road, Nagercoil.

கர்த்தரில் பிரியமானவர்களே,

நம்மைச் சீக்கிரமாகத் தம்மண்டை சேர்த்துக்கொள்ள வரப்போகும் நமதருமை நேசர் இயேசுவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

நேற்றைய தினம் ஒரு பெண்மணியிடமிருந்து என்னண்டை வந்த கடிதம் ஒன்றின் முதல் பாராவில் கீழ்க்கண்ட சில வரிகள் எழுதப்பட்டிருந்தன:–

"தாங்கள் கிறிஸ்துவிற்காகச் செய்யும் ஊழியம் தலைசிறந்தது. என்னைப்போன்ற எத்தனை, எத்தனையோ நொறுங்குண்ட ஆத்துமாக்களுக்கு, நிராசையான ஆத்துமாக்களுக்கு, வாழ்வில் தோல்வி கண்ட ஆத்துமாக்களுக்கு இதம் அளிக்கும் ஒரு கருவியாக, அமைதியைத்தரும் ஒரு ஆத்துமாவாக தங்களுடைய 'தேவ எக்காளம்' விளங்குகிறது என்பதைச் சொல்லத்தெரியாமல் தவிக்கின்றேன்."

எல்லா மகிமையும், கனமும் கர்த்தர் ஒருவருக்கே உரியது. தூசியும், சாம்பலுமான நான் மேன்மைபாராட்ட ஒன்றுமில்லை.

இந்தச் சிறிய பத்திரிக்கையானது அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமானதாக இருப்பதற்காக என் அன்பின் ஆண்டவரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கின்றேன். இப்படிச்செய்யச் சித்தங் கொண்டவர் நம் அன்பின் தேவன்.

இந்தப் பத்திரிக்கையை ஒருசில மாதங்கள்கூட நம்மால் அச்சிட்டு வெளியிடுவது சாத்தியமாகுமா என்று நான் வேதனைப்பெருக்கோடு எண்ணிய நாட்கள் 1968-ஆம் ஆண்டில் இருந்தன. அந்த ஆண்டின் ஆரம்ப மாதங்கள் ஒன்றின் ஒரு நாள் மத்தியானவேளை வீட்டிற்கு முன்னர் இருந்த புல்தரையில் உட்கார்ந்து மேற்கண்டவாறு துக்கத்துடன் நான் சிந்தித்துக்கொண்டு பத்திரிகைக்கான செய்தியை எழுதிக்கொண்டிருந்தபோது ஆண்டவர் என்னுடன் தமது அமர்ந்த மெல்லிய குரலால் பேசினார். "சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்............" (ஏசா. 60:22) என்பதே கர்த்தர் என்னுடன் பேசிய வார்த்தைகளாகும்.

தேவாதி தேவனின் அந்த மாறாத வாக்குத்தத்தத்திற்காக அவரை ஸ்தோத்தரிக்கின்றேன். அது அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து பலித்து வருகின்றது. அவர் உண்மையுள்ள தேவன் (2 தெச. 3:3) அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கும் தேவன் (சங். 146:6) கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

தங்களுடைய வாழ்க்கையில் யார், யார் ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பார்களோ, யார், யாருடைய உள்ளங்களில் பரிசுத்தமும், முற்றும் ஒப்புக்கொடுத்தலின் சிந்தையும்இருக்குமோ அவர்களைக்கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்ய இன்றும் ஆயத்தமாயிருக்கின்றார். அவ்விதமான ஒரு மனிதனைக் கண்டுபிடிக்கும் பொருட்டாக ஆண்டவரின் கண்கள் பூமியெங்கும் இன்றும்

உறவாடிக்கொண்டிருக்கின்றது (யோவா. 15:5) அந்த மனித நேசரிடம் அவர் பேசுகின்றார், தமது இருதயத்தின் கருத்தை அவனுடன் பகிர்ந்துகொள்ளுகின்றார், அதுமட்டுமல்ல, அவர் அவனுடன் சம்பாஷிக்கின்றார், அப்படிச் செய்வதில் அந்த அன்புள்ள தேவனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி.

அருமையான சகோதரனே, சகோதரியே, கர்த்தர் உன்னோடு பேசுவதை நீ எப்பொழுதாகிலும் கேட்டதுண்டா? அவருடைய அசரீரியான குரலையாவது, அல்லது இருதயத்திலுள் தொனிக்கும் அவரின் அமர்ந்த மெல்லிய குரலையாவது நீ கேட்டிருக்கின்றாயா?

ஒரு மனிதன் தேவனுக்கு முன்பாக உண்மையற்றவனாயிருப்பதற்கும், உலகத்தின் செல்வத்தை ஒரு கண்ணாலும், கர்த்தரைத் தனது மற்றொரு கண்ணாலும் இரு மனதுடையவனாய் இங்கும் அங்கும் பார்ப்பதற்கும் முக்கிய காரணம் அவன் கர்த்தருடைய ஜீவனுள்ள குரலைத் தன் வாழ்வில் கேளாததுதான். அநேக ஊழியர்கள் தங்கள் தேவ ஊழியங்களை லோக ஆதாயத்திற்கும் பணயம் வைத்ததன் காரணமும் இதுவேதான்.

உண்மையாகவே ஒரு மனிதன் வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தர் தன்னுடன் பேசுவதை ஒருமுறை கேட்டிருப்பானாயின் அவனது வாழ்க்கை முற்றும் மாற்றம்பெற்று பிரகாசிக்கத் தொடங்கிவிடும். அவன் பிசாசினால் பாவஞ்செய்யத் தூண்டப்படும் பொழுதெல்லாம் தன்னுடன் ஒருமுறைபேசிய கர்த்தரின் ஜீவனுள்ள குரலை நினைவுகூர்ந்து பயந்து நடுங்கி பாவத்திற்கு விலகி ஓடிவிடுவான். அவன் கேட்டதான அந்தப் பரலோகக் குரல் அவனை நாளுக்கு நாள் பரிசுத்தப்படுத்தும் ஏதுகரமாகிவிடும்.

சர்வ வல்லவரின் அமர்ந்த மெல்லிய குரல்களையும், அசரீரியான வார்த்தைகளையும், பல தடவைகள் கேட்கும் பாக்கியம் பெற்றவன் நான். அதற்காகதான் என்கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன். மாத்திரமல்ல, நான் நடந்தாலும், படுத்திருந்தாலும், வேலையில் ஈடுபட்டிருந்தாலும் என் உள்ளத்தில் தொடர்ந்து சம்பாஷித்துக் கொண்டே இருக்கின்ற பரிசுத்த ஆவியானவரின் கிரியையையும் காண்கின்றேன். ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு ஆலோசனை கூறுவதைப்போல, அவனை வழி நடத்துவதைப்போல என் நேசரின் அன்பின்கரம் என்மேல் அமர்ந்து என்னை நடத்துவதை நான்காண்கின்றேன். இந்த அறிவுக்கெட்டாத தேவ அன்பிற்கு எந்த ஈட்டையும் செலுத்தமுடியாது.

கர்த்தரின் சத்தத்தைக் கேட்பதற்கு மனிதன் தன்னைப்பரிசுத்தப்படுத்துவது அவசியமாகின்றது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத். 5:8) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. தன் இருதயத்

தைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளும் மனிதனிடம் அவர் வாசம் செய்கின்ருர். அவனுடைய துன்பமும், துக்கமும், கண்ணீரும், பிரச்சினைகளும் அவனது உள்ளத்தில் நிலைத்திருக்கும் ஆண்டவரின் சமூகப் பிரசன்னத்திற்கு முன் பகலவனைக் கண்ட பனிபோல மறைகின்றது. எத்தனை பாடுகள் இருப்பினும் மனமகிழ்ச்சியோடு அவன் அதைத் தாங்க தேவகிருபை பெற்றுவிடுகின்ருன்.

நீ உன் வாழ்க்கையில் இதுவரை கர்த்தரின் குரலை கேளாமலிருந்தால் இனி அதனைக்கேட்க ஆசைகொள். கண்டிப்பாக ஆண்டவர் உன்னேடுபேசவேண்டும். அப்பொழுதுதான் உன்வாழ்க்கை ஆசீர்வாதம் பெறும். சின்ன சாமுவேலைப் போன்று "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" (1சாமு. 3:10) என உன்னை தரைமட்டும் தாழ்த்தி தேவனுடைய குரலைக் கேட்க ஆயத்தப்படு. கர்த்தர் நிச்சயமாக உன்னேடு பேசுவார். கர்த்தர் தன்னுடன் பேசுவதைக் கேட்டும் காதுகளைக்கொண்ட மனிதன் பாக்கியவான். அவனுடைய பாதங்கள் நூற்றுக்கு நூறு தப்பாமல் ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட நன்னுளிலே மோட்ச வாசல்களைக் கடந்து பரம மகிமையினுள் பிரவேசிக்கும்.

கர்த்தர் வருகிருர். N. சாமுவேல்

லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்

(Bishob J. C. RYLE)

லோத்தின் மனைவி செய்த பாவத்தின் சரித்திரமானது பரிசுத்த ஆவியானவரால் மிகவும் எளிமையான முறையில் ஓரிரு வார்த்தைகளால் மாத்திரம் "அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனுள்" (ஆதி. 19:26) என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது இதற்குமேல் எவ்வித விளக்கமுமேயில்லை.

லோத்தின் மனைவியுடைய மீறுதலின் முழு கருப்பொருளும் "அவள் பின்னிட்டுப்பார்த்தாள்" என்றவார்த்தைகளில் பொதிந்து கிடக்கின்றது.

அந்தப் பாவமானது மிகவும் சிறியதோர் பாவமாக மாத்திரமே உனது கண்களுக்குத் தெரிகின்றதா? அவளின் அற்பமான பாவக்குற்றம் என்றுகருதப்படும் அக் காரியத்திற்கு இத்தனை கொடிதானதோர் தண்டனை அளித்தல் சரிதானு என்று நினைக்கின்ருயோ? அவள்பார்த்த அந்தப்பார்வையில், கொஞ்சமல்ல, அநேகம்அடங்கியுள்ளது. வேதாகமத்தில் எழுதியிருப்பதற்கு அதிகமாக அநேக காரியங்களை மறைமுகமாக அது சுட்டிக் காண்பித்து நிற்கின்றது.

லோத்தின் மனைவியின் உண்மை சுபாவம்

அந்தப் பார்வையானது மிகவும் சிறியதானதோர் காரியமாக இருப்பினும் லோத்துடைய மனைவியின் அந்தரங்கமான தேவ பக்தியற்ற குணாதிசயத்தை முற்றுமாக வெளியிடுவதாயுள்ளது. பெரிய காரியங்களைவிடச் சிறியதும், அற்பமுமான காரியங்களே ஒரு மனிதனின் மனநிலையை அப்பட்டமாக அடிக்கடி விளக்கிக் காட்டுவதாயுள்ளன. எந்த மருந்துகளாலும் குணமளிக்க முடியாத மரணத்திற்கேதுவான அநேக கொடிய நோய்களின் முன் அறிகுறிகள் மிகவும் அற்பமானவைகளாக ஆரம்பத்தில் தெரிகின்றன. ஏதேன் தோட்டத்தில் ஏவாள் பறித்துப் புசித்த கனியின் காரியம் மிகச்சிறியதுதான், ஆயினும் அது அவளை நிர்வாணி என்று அவள் தன்னை கண்டுகொள்ளவும், பாவி என்ற நிலைமைக்கும் அவளைக் கொண்டு சென்றுவிட்டது. ஒரு கோபுர சுவற்றில் சிறிய வெடிப்பின் தாரை ஒன்று நீண்டுகாணப்படுமாயின், அதின்கருத்து அந்தகோபுரத்தின் அடிமட்ட அஸ்திபாரம் சீர்குலைந்துவிட்டதுஎன்பதும், இதன்காரணமாக முழுக் கட்டிடமும் விழுதலுக்கு ஏதுவான நிலையில் உள்ளது என்று நாம் அறிய முடிகின்றது. ஒரு சிறிய வைக்கோல் தாளடி (A Straw) காற்றானது எந்தத் திசையில் வீசுகின்றது என்பதை காட்டுகின்றது. ஒரேஒரு பார்வையானது பாவியான மனிதன் ஒருவனின் சீர்கெட்ட அசுத்த இருதயத்தைப் படம்போல காண்பித்துவிடுகின்றது.

கீழ்ப்படியாமை

அவளுடைய பார்வையானது சிறிய செயல்தான், ஆயினும் அது அவளின் கீழ்ப்படியாமையை ரூபகாரப்படுத்துகின்றது. தேவதூதனின் மிகத் தெளிவான, தவறற்ற கட்டளை யாதெனில் "பின்னிட்டுப் பாராதே" (ஆதி. 19:17) என்பதுதான். இந்தக் கட்டளையை லோத்தின் மனைவி கைக்கொள்ள மறுத்தாள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" (1 சாமு. 15:22) என்று கூறுகின்றார். தேவன் தமது வார்த்தைகளின் மூலமாகவோ, அல்லது தம்முடைய ஊழியர்கள் மூலமாகவோ பேசுகையில் மனிதன் செய்யவேண்டிய கடமை தெளிவாகிவிடுகின்றது.

அவநம்பிக்கை:

அந்தப் பார்வையானது மிகவும் சிறியதுதான், ஆயினும் அப்பார்வை லோத்தின் மனைவியின் பெருமை நிரம்பிய அவநம்பிக்கையை எடுத்துப் பேசுவதாகவிருக்கின்றது. மெய்யாகவே, தேவன் சோதோமை அழித்துவிடுவாரா என்பதைக் குறித்து அவள் பெரிதும் சந்தேகம் கொண்டிருந்தது தெரியவருகின்றது. அழிவு இருப்பதையும், அவசரமான ஜீவன் தப்ப ஓடும் ஓட்டத்தைக் குறித்தும் அவள்

அவநம்பிக்கை கொண்டிருந்தாள். ஆனால், விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி.11:6) என்று தேவ வார்த்தை கூறுகின்றது. எவனொருவன் தேவனைவிடத் தனக்கு அதிகம் தெரியும் என்று எண்ணுகின்றானோ, எவனொருவன் தேவன் தமது வார்த்தைகளின் மூலமாக எச்சரித்துப் பயமுறுத்துகையில் நிர்விசாரமாயிருந்து அதைக் குறித்து அலட்சியமாயிருப்பானோ அவன் மாபெரும் அழிவின் விழிம்பில் இருக்கின்றான். தேவனது செயல்களின் காரணத்தையும், கருத்தையும் உன்னால் புரிந்துக்கொள்ள இயலாவிடின் உன் கைகளால் வாயைப் பொத்தி அமர்ந்திருந்து அவரை விசுவாசி.

உலக நேசம்:

லோத்தின் மனைவி பார்த்த பார்வை சின்னதோர் காரியம் தான், எனினும், உலகத்தைக் குறித்து அவள் கொண்டிருந்ததான தோர் அந்தரங்க நேசத்தை அது எடுத்தியம்புகின்றது. சோதோமை விட்டு அவள் சரீரமானது வெளியே இருந்தபோதினும் அவள் இருதயமானது சோதோமிற்குள்ளேயேதானிருந்தது. சோதோமைவிட்டு வெளியேறி வந்தபோதினும் அவள் தனது ஆசைகளையும், பற்றுதல்களையும் சோதோமில்தான் விட்டு வைத்திருந்தாள். தனது பொக்கிஷம் எங்கேயிருந்ததோ அங்குதான் அவளது கண்களும் திசை காட்டுக் கருவியின் காந்த முள்போலத் திரும்பினது. "ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக். 4:4) "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை". (1 யோ. 2:15)

நமது செய்தியின் மிக முக்கியமான இக்கருத்தினுக்கு உனது விசேஷித்த கவனத்தைச்செலுத்தும்படி உன்னைக் கேட்கின்றேன். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்கூட நீ இதனைக் கவனிக்க ஆவல் கொள்ளுகின்றார். அது என்னவெனில், லோத்தின்மனைவி உலகத்தைப் பின்னிட்டுப் பார்த்து தன் நித்திய ஜீவனை இழந்துபோனாள் என்பதுதான். ஒரு காலத்தில் அவள் நல்ல குணசாலியும், தேவ பக்தியுடையவளுமாயிருந்திருக்கலாம். ஆயினும் அப்பொழுதே அவள் இருதயத்தின் ஆழத்தில் உலக நேசம் ஒட்டிக்கொண்டு தானிருந்தது. உலகப்பற்றை அவள் ஒருபோதும் விட்டுவிடவே இல்லை. ஒரு காலத்தில் அவளின் பாதங்கள் மோட்சம்செல்லும் பாதையில் காணப்பட்டபோதிலும் அவள் உள்ளத்தின் ஆழமான எண்ணங்கள் உலகத்தைப் பற்றியதாகவேதானிருந்தன. உலக நேசத்தை வாஞ்சிக்கும் மக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மாபெரும் ஆபத்தைக் குறித்த படிப்பினையை லோத்தின் மனைவியிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள தேவன் விரும்புகிறார். அப்படிப்பட்டதான காணும் கண்களையும், உணர்வுள்ள இருதயத்தையும் கர்த்தர் நமக்குத் தந்தருள்வாராக.

ஒருகாலத்தில் நல்லதோர் கிறிஸ்தவ ஜீவியம் செய்து, மோட்சம்செல்ல இப்பொழுதே ஆயத்தம் என்றிருந்ததான ஆயிரக்கணக்கான தேவமக்கள் கொஞ்சம், கொஞ்சமாகப் பாதையிலிருந்து மெதுவாக விலகி இப்பொழுது இயேசுவுக்குத் தங்கள் புறமுதுகினைக் காண்பிக்கும் மக்களாய் மாறி இருக்கின்றனர். மோட்சப் பாதையிலிருந்து இம்மக்களைத் தடுத்ததுயார்? ஒருக்கால் இம்மக்கள் பரிசுத்த வேதாகமத்தைத் தவறு என்று கண்டு கொண்டார்களா? அல்லது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது வார்த்தைகளை நிறைவேற்றுவதில் தவறிவிட்டார் என்று இம்மக்கள் சோதித்து அறிந்துகொண்டனரா? இல்லை இல்லவே இல்லை. உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கும் உலக நேசம் என்ற கொள்ளை நோய் இம்மக்களையும் பிடித்துக்கொண்டது. அவ்வளவுதான். உலக நேசம் என்னும் தொத்துநோய் இந்த மக்களுக்கும் பரவிவிட்டது. இந்த நாசகாரி நோய் இருளிலே நடமாடி மக்களை மத்தியானத்திலே பாழாக்குகின்றது. அநேகரை அது காயப்படுத்திப் பலவான்களான பரிசுத்தர்களைச் சங்காரம் பண்ணியுள்ளது. கிறிஸ்தவ மார்க்கத்தைப் பிழைப்புக்கடுத்த ஆதாயத் தொழிலாக்க விரும்புவோரே, உங்களுக்கு எதிராக நான் எனது எச்சரிப்பின் குரலை எழுப்புகின்றேன். அழிவின் இந்த கனநித்திரையின் ஆவியினின்று துரிதமாக எழும்புங்கள். லோத்தின்மனைவியின் பாவத்தை நினைத்துக்கொள்ளுங்கள், என்று நான் உங்களுக்கு முன் சத்தமிடுகின்றேன். லோத்தின் மனைவி ஒரு கொலைகாரியல்ல, அவள் ஒரு விபசாரக்காரியுமல்ல, திருடியுமல்ல, ஆனால் அவள் தேவ பக்தி என்ற போர்வையைப் போர்த்து உலகத்தை பின்விட்டுப் பார்த்து அழிந்தொழிந்தாள்.

ஆண்டவரை மெய்யன்புடன் நேசிக்கும் உண்மை மனதுடைய கிறிஸ்தவ சகோதரனே, சகோதரியே, இந்தப் பொல்லாத நோய் உன்னையும் பற்றிக்கொண்டு உன் ஆத்துமாவை சேதப்படுத்திப் போடாதபடி விழிப்பாயிரு.

உலக நேசத்தில் ஒட்டிப்போன இளவயதினர்.

தேவபக்தியுள்ள குடும்பங்களில் பிறந்த எத்தனையோ பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவில் தொடங்கிப் பிசாசின் ஆதிக்கத்தில் முடித்திருக்கின்றனர். இவர்கள் தங்கள் குழந்தைப் பருவங்களில் தேவபக்தி நிரம்பினோராய் இருந்தனர். கிறிஸ்தவப் பக்திப்பாடல்களைப் பாடிமகிழ்ந்து அநேக வேதவசனங்களை மனப்பாடமாக ஒப்புவித்தனர். ஆவிக்குரிய வாழ்வின் நாட்டத்தையும், பாவத்தினைக் குறித்த நடுக்கத்தையும் இவர்கள் கொண்டிருந்தனர். ஆண்டவர் இயேசுவை இவர்கள் நேசித்து மோட்சலோகத்தை வாஞ்சித்தனர். ஆலயத்திற்குச் செல்லுவதை வாஞ்சித்துப் பிரசங்கங்களைக் கேட்க ஆவல் கொண்டனர். ஆனால், நாட்கள் கடந்து சென்றன. குழந்தைப்பருவ நாட்கள் கழிந்து வாலிப வயது வந்து

சேர்ந்தது. குழந்தைப் பருவத்தின் பக்தி நிலைமாறி உலகம் அளிக்கும் இன்ப வாழ்வை வாலிபன் எதிர்நோக்கினான்.

சிறுபிள்ளையான சிறுமி வாலிபப் பெண் ஆனாள். சிறுபிள்ளையில் தான் கொண்டிருந்த பக்தி வாழ்க்கையைப் புறம்பாக்கி ஆடைகளிலும், அலங்காரங்களிலும், உலகக் கேளிக்கைகள் நிரம்பிய கூட்டங்களிலும் தன் கவனத்தைத் திருப்பினாள். ஆரம்பத்தில் அவள் கொண்டிருந்த பக்தியின் ஜீவியம் பறந்து மறைந்தது. உலக நேசம் பக்தி வாழ்க்கையை நெருக்கி அழித்துப்போட்டது. மேற்கண்ட இருபகுதியினரும் லோத்தின் மனைவியைப் பின்பற்றினவர்கள்தான். அந்தோ! அவர்கள் பின்னிட்டுப் பார்த்தனர்.

உலக நேசத்தில் ஒட்டிப்போன தேவ ஊழியர்கள்:

எத்தனை தேவ ஊழியர்கள் தங்களுடைய கரங்களில் ஒப்புவித்த தேவ ஊழியத்தை ஆரம்பத்தில் மிகவும் உற்சாகத்தோடும், முழு பெலத்தோடும் செய்து பின்னர் உலக நேசத்தால் கவர்ச்சிக்கப்பட்டுச் சோம்பேறிகளாய்ப் போய்விட்டனர்! இம்மக்கள் தங்கள் ஊழியத்தைத் தொடங்கின ஆரம்ப நாட்களில் கிறிஸ்துவுக்காகச் செலவிடப்படவும், செலவிடவும் ஆயத்தமாயிருந்தனர். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் திருவசனத்தைப் பிரசங்கித்தவர்கள் இவர்கள்.

இவ்வூழியர்களின் பிரசங்கங்கள் ஒரு சமயம் ஜீவனுள்ளவைகளாயிருந்தமையால் ஆலயங்கள் மக்கள் கூட்டங்களால் நிரம்பி வழிந்தன. வீடு சந்திப்புகள்-ஜெபக் கூட்டங்கள்-தெருப் பிரசங்கங்கள் இப்படி எத்தனை, எத்தனையோ இம்மக்களின் ஆவலுள்ள ஊழியங்களாயிருந்தன. இப்படியாக ஆவியில் ஆரம்பம் பண்ணின இந்த தேவ ஊழியர்கள் காலப்போக்கில் உலக நேசம் என்னும் தெலீலாளின் மடியில் தலைசாய்த்துப் படுத்து இப்பொழுது தங்கள் ஆவிக்குரிய கண்களை இழந்து அந்தகர்களாகித் தடவித் திரிகின்றனர்.

உலகப்பிரகாரமான பெண்ணை விவாகம்செய்து பெருமையான ஜீவியத்திற்கு இவர்கள் தங்களை விற்றுப்போட்டனர். ஜெபமும், வேத வசன தியானமும் இம்மக்களின் ஜீவியங்களிலிருந்து பறந்து போய்விட்டன. இவர்களின் பிரசங்கங்களில் இப்பொழுதுவல்லமை குன்றிப்போயிற்று. இதன் காரணமாக ஆலயத்தில் மக்களின்எண்ணிக்கை குறைந்து ஆலயம் வெறுமையாகக் கிடக்கின்றது. இம்மக்கள் இப்பொழுதுபேசும் சம்பாஷணைகள் அனைத்தும் உலகநேசத்தைப் பற்றிய செய்திகளால்தான் நிறைந்து கிடக்கின்றன.

ஆதி அப்போஸ்தலர்களின் பரிசுத்த ஸ்தானங்களைக் கைப்பற்றிவிடப் போகிறவர்களாயும், கிறிஸ்து இயேசுவின் நல்ல போர்ச்சேவகர்களாயும் முதலில் காணப்பட்ட இந்த ஊழியர்கள் காலக்கிர

மத்தில் வண்டல்களாயும், அசடுகளாயும் மாற்றம் பெற்று ஒன்றுக்கும்உதவாமல் போயிருக்கின்றனர். உலகம் இவர்களின் கைகளையும், கால்களையும் இறுகக் கட்டிப்போட்டுவிட்டது.

மோட்சம் என்னும் துறைமுகத்தை நோக்கிப் பட்டொளி வீசிப் பறக்கும் கொடியோடு புறப்பட்ட இம்மக்களின் வாழ்க்கைக் கப்பல் உலகப் பற்று, உலக நேசம் என்னும் ஓட்டையால் பழுதுபட்டுத் தண்ணீர் உட்புகுந்து மோட்சக்கரை அப்பால் மகிமையோடு தெரியும் நல்ல வேளையில்தானே தண்ணீரால் நிரம்பி சமுத்திரத்தின் அடிமட்டத்திற்குள் மூழ்கி மறைவது எத்தனை துயரமான காரியம்!

யாக்கோபு, தாவீது, பேதுரு, போன்றவர்களோடு தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைத் தொடங்கின இம்மக்கள் ஏசா, சவுல், யூதாஸ்காரியோத்து போன்றவர்களுடன் தங்கள் ஜீவியத்தை முடித்திருக்கின்றனர். ரூத், அன்னாள், மேரி, லீதியாள் போன்ற பரிசுத்த வாட்டிகளுடன் வாழ்க்கையைத் தொடங்கின இம்மாதர்கள் சீர்கெட்ட லோத்தின் மனையாளுடன் தங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தைத் துக்கத்துடன் முடித்திருக்கின்றனர்.

வாசிப்போனே, இருமனதுடையோனாய் இயேசுவைப் பின்பற்றாதே. உலகத்தின் இழிவான ஆதாயத்தைச் சுதந்தரிக்கும் பொருட்டாக அன்பின் ஆண்டவரைப் பணயப்பொருளாக்க விரும்பாதே.

இயேசுவைப் பின்பற்ற நீ விரும்பினால் அவர் சித்தப்படி அவரைப் பின்பற்றிச் செல். உண்மையுள்ளவனாயிரு. பூரண சற்குணனாயிரு. பழுதற்றவனாயிரு. எல்லாவற்றிற்கும் மேலாக லோத்தின் மனைவி செய்த பாவத்தை நீயும் செய்துவிடாதபடி எச்சரிக்கையாயிரு.

உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பெலத்தோடும் இயேசுவை நேசி. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடு. அதன்பின்னர் அனைத்தும் உனக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று விசுவாசி.

உனது நித்திய மனமகிழ்ச்சியின் நிமித்தம், உனது பிரயோஜனத்தின் நிமித்தம், உனதுநித்தியபாதுகாப்பின் நிமித்தம், உனது விலையேறப்பெற்ற ஆத்துமாவின் நிமித்தமாக லோத்தின்மனைவியின் பாவத்தைக் குறித்து மகா ஜாக்கிரதையுடனிரு.

"........கலப்பையின்மேல் தன் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல........" (லூக். 9:62) என்று நம்அருமைஆண்டவர் இயேசு கிறிஸ்து எத்தனை அருமையாகக் கூறியுள்ளார்.

Courtesy "THE OVERCOMER" England

-: எல்லாம் வல்ல தேவன் :-

தேவனுக்கு மகிமை உண்டாவதாக. இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் பரிசுத்தமான தேவகிருபைகளும், பரிபூரண சமாதானமும், மகிமையான பரலோக ஆசீர்வாதங்களும் உங்களுக்கு உண்டாவதாக. இன்றும், என்றும் உங்களில் நிலைத்திருப்பதாக. ஆமென்.

ஆதியில், தேவனால் அற்புதமாகப் படைக்கப்பட்டு ஆதாம் என்று தேவனால் பெயரிடப்பட்ட முதல் மனிதன் தன் கண்களைத் திறந்து பார்க்கின்றான். இதோ, ஓர் ஒளிமயமான, ஜெகஜோதியான ஒருவர் தன் கண்முன் காட்சி அளிக்கின்றார். யாரிவர்?

தான் படைத்த மனிதனைப்பார்த்து முதன்முதல் தேவனே பேசுகின்றார். "ஆதாம், இதோ பார், இந்த மண்ணினாலே, என் கையினாலே உன்னை உருவாக்கி, உனக்கு உயிர்கொடுத்திருக்கின்றேன். நான் தேவன்" என்கின்றார். ஆதாம், மண்ணைப் பார்க்கின்றான், தன்னைப் பார்க்கின்றான், தன்னைப் படைத்த தேவனையும் பார்க்கின்றான். ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியம். கொஞ்சநேரம் சென்றதும், தேவன் அப்படியே எழுந்தருளி மேல்நோக்கி, மேகமண்டலங்களைக் கடந்து செல்லுவதைப் பார்க்கின்றான். தன்னையும் அறியாமல் தன் சத்தத்தை உயர்த்தி "என் தேவனே, என் தேவனே, என்னை விட்டுவிட்டு, அதிலும் என்னைத் தனிமையாக விட்டு விட்டு, எங்கே செல்கின்றீர்? என்னை ஆட்கொண்ட பிதா நீர் அல்லவா! பிதாவே இறங்கிவாரும், சீக்கிரமாய் வாரும். யாரும் எனக்கு துணையில்லையே, உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? வாரும், என் தேவனே, வாரும், வாரும்" என்கின்றான். அப்படியே கண்ணயர்ந்து தேவனே, தேவனே என்று சொல்லித் தேவனையே நினைத்துக்கொண்டு தூங்கிவிடுகின்றான் முதல் மனிதன்.

என் அன்பு தேவ எக்காள வாசகர்களே, உங்கள் ஒவ்வொருவருக்கும் என் இருகரங்களையும் குவித்து என் அன்பின் வாழ்த்துதலையும், ஸ்தோத்திரத்தையும் கூறிக்கொண்டு இச்செய்தியை தேவ ஆவியின் உதவியினால், தேவமகிமைக்காக, உங்கள் ஆறுதலுக்காக, உங்கள் ஆசீர்வாதத்திற்காக, உங்கள் இரட்சிப்புக்காக, உங்கள் பரிசுத்தத்திற்காக, உங்கள் கண்ணீர் துடைக்கப்படுவற்காக தேவாதி தேவனைக் குறித்து சில மாதங்கள் எழுதப்போகின்றேன். தொடர்ந்து வாசியுங்கள். தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அல்லேலூயா.

இந்தச் செய்தியில் மனிதனின் முதல்நாள் வாழ்க்கையைக் குறித்து நாம் தியானிக்கப்போகின்றோம். அவனுக்கு மனைவியோ,

பிள்ளைகளோ இல்லை. நண்பர்களோ, இன்பங்கொடுக்க அன்னவஸ்திரமுமில்லை. தங்க இடமும், மங்களான ஓர் விளக்கும் இல்லை. ஏகாந்தத்தில் ஏதேன் தோட்டத்தில், ஏதும் அறியாதவனாக, எந்தப் பாவத்தையும் செய்யாதவனாக, செய்ய விரும்பாதவனாக, பாடித்திரியும் பறவையைப்போல பழங்களை மாத்திரம் சாப்பிட்டுப் பரலோகத்தின் தேவனோடு உலாவி, உரையாடி மகிழ்ந்திருக்கின்றான். இது தான்வாழ்க்கை! ஆம் வாழத்தகுந்த வாழ்க்கை. இதுதான் ஆனந்தம்! பேரானந்தம்! பரமானந்தம்!

ஆதாமின் நினைவெல்லாம் தேவன்தான். தேவனோடு பேசுவது தான் ஆதாமுக்குமகிழ்ச்சி. தேவனைத் தரிசிப்பதுதான் ஆதாமுக்கு ஆனந்தம். தேவனோடு ஆதாம் எந்தப் பாஷையில் பேசினான் என்று ஆராய்ந்து பார்த்தேன். இன்னும் பாஷைகள் உண்டாக வில்லை. தேவன்தான் மனிதனோடு முதல் முதலாகப் பேசினார். ஆகையால் அது பரலோக பாஷையாகவிருக்கலாம். பரிசுத்தமான பாஷை. ஆதாம் என்று பெயர் கொடுத்தார். எதற்காக? அவனை பெயர் சொல்லி அழைத்து அவனோடு பேசி மகிழ.

அன்புச் சகோதரனே, அன்புச் சகோதரியே, தேவன் - உன்னைப் படைத்த தேவன் - உன்னைத் தன் சாயலாக உருவாக்கிய தேவன் - உன்னைத் தன் மகிமைக்காக சிருஷ்டித்த தேவன் - உன்னைத் தம்மோடு பரலோகில் சேர்த்துக்கொள்ளச் சித்தங்கொண்ட தேவன் - உன்னைப் பரிசுத்தப்படுத்த விரும்பும் தேவன் - உன்னைக் கண்டு உன்னோடு பேசி மகிழ ஆசைப்படும் தேவன் - உன்னோடு வாசஞ்செய்ய வாஞ்சிக்கும் தேவன் என்றைக்காகிலும் உன்னோடு பேசியிருக்கிறாரா? நீ தேவனைத் தரிசித்திருக்கிறாயா? இல்லையென்றால் உன் இருதயம் அசுத்தமாயிருக்கிறதா? அசுத்த எண்ணங்களாலும், பொல்லாத சிந்தனைகளாலும், பாவ ஆசைகளாலும் உன் இருதயம் நிறைந்திருக்கிறதா?

உன் கண்கள் தேவனைத் தரிசித்தால் நலமாயிருக்கும்! உன் காதுகள் தேவன் பேசுவதைக் கேட்டால் எத்தனை மேன்மையாயிருக்கும்! தேவன் உன்னைப் பெயர் சொல்லி அழைத்தால் எத்தனை இன்பமாயிருக்கும்! அப்படித்தானே? இதுவே உன் வாஞ்சையாக இருக்கட்டும். இதுவே உன் ஆசையாக இருக்கட்டும். இதுவே உன் தாகமாக இருக்கட்டும். இதுவே உன் பிரியமாக இருக்கட்டும். இதுவே உன் இதய ஏக்கமாக இருக்கட்டும். இதுவே உன் வாழ்க்கையாக இருக்கட்டும்.

தூக்கம் வந்தால் தூக்கம். பசி எடுத்தால் பழங்கள். மற்ற நேரமெல்லாம் தேவனோடு தனித்திருக்கும் இன்பமான வாழ்க்கை. வேறே ஒரு வேலையும் கிடையாது. கவலையில்லாத வாழ்க்கை. பயமில்லாத வாழ்க்கை. பாவமில்லாத வாழ்க்கை. பரிசுத்தமான

வாழ்க்கை. ஆடம்பரமில்லாத வாழ்க்கை. ஆனந்தமயமான வாழ்க்கை. ஆபத்தில்லாத வாழ்க்கை. பூலோகத்திலே பரலோக வாழ்க்கை. இது ஆதாமுக்கு மாத்திரம்தானா? எனக்குக் கிடைக்காதா? மனுஷனே, தேவன் உன்னை இதற்காகத்தான் படைத்திருக்கிறார். மனுஷியே, தேவன் உன்னை இதற்காகத்தான் படைத்துள்ளார். நீ வியாதியினால் வருந்தி வாழ்வதையோ, கண்ணீர் வடித்து கவலையோடு வாழ்வதையோ, பெலவீனத்தோடு பயந்து வாழ்வதையோ, பாவத்துடன் பரிதாபத்தோடு வாழ்வதையோ தேவன் என்றும் விரும்பினதுமில்லை, விரும்பப்போகிறதுமில்லை. நீ சுகமாய் வாழ்ந்திருக்கவே தேவன் விரும்புகிறார். அவர் நல்ல தேவன். ஆமாம், தேவன் நல்லவர். சுத்த இருதயமுள்ளவர்களுக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார். (சங். 73:1)

இது மட்டுமல்ல தேவன் வல்லவர். வானத்தையும், பூமியையும் படைத்தவர். ஆகாயத்துப் பறவைகளையும், ஆயிரமாயிரமான மிருகங்களையும் படைத்தவர். கல்லையும், மண்ணையும் கண்ணால் காண்கின்ற யாவையும் படைத்தவர். கணக்கற்ற தூதர்களையும், தூதர்கள் வாசம் செய்யும் பரலோகத்தையும் படைத்தவர். மேக மண்டலங்களையும், சூரிய மண்டலங்களையும், நட்சத்திர மண்டலங்களையும், சந்திரனையும் படைத்தவர். "எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் தேவன்" (எபி. 3:4)

ஆனால், இன்று மனிதனோ, மனிதனால் உண்டுபண்ணப்பட்ட கற்சிலைகளையும், பொற்சிலைகளையும் வணங்குகின்றான். இது அறியாமையும், கொடிய தவறுமாகும்.

கிறிஸ்தவர்களும் கூடத் தேவனை மறந்து, கண்மூடித்தனமாக, கண்களைத் திறந்து பக்தியில்லாமலும், பயமில்லாமலும் ஆராதனை செய்கின்றார்கள். இது ஒழுங்கல்ல. தேவபக்தியில்லாமலும், தேவ பயமில்லாமலும், தேவசித்தம் செய்யாமலும், வேதவசனத்தை அறியாமல் சடங்காச்சாரமாய் தொழுது கொள்ளுகிறார்கள் இது தொழுகையல்ல. ஜெபத்துடன் இதைக் குறித்துச் சிந்திப்போம். செயல்படுவோம். கர்த்தரை மகிமைப்படுத்துவோம்

அப்படியானால், மனிதன் ஆண்டவரை எப்படித் தொழுது கொள்ளவேண்டும்? பாவிகளை பரிசுத்தவான்களாக மாற்ற வல்ல பரிசுத்த வசனங்களையுடைய பரிசுத்த வேதாகமம் இதைக் குறித்து மிகவும் தெளிவாக, அதிகத் திட்டமாகப் போதிக்கிறது. மல்கியா 2:15-ன் படி தேவபக்தியோடு வாழ மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் சிருஷ்டித்த தேவனை வாழ்த்தி வணங்கவேண்டும். ஸ்தோத்திரம் செலுத்தித் தொழுது கொள்ள வேண்டும். ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். பாசத்தோடு சேவிக்கவேண்டும். உத்தம இருதயத்தோடு ஊழியம்

செய்யவேண்டும். கர்த்தரின் பாதம் பணிந்து புகழ் கீர்த்தனைகளைப் பாடவேண்டும். பரிசுத்தத்தோடு ஆண்டவரைப் போற்றிப் புகழ வேண்டும். ஐயா, அம்மா நீங்கள் இப்படிச் செய்கின்றீர்களா? தம்பிமார், தங்கையரே நீங்களும் இப்படிச் செய்கின்றீர்களா?

தேவனை நம்பு என்று சொல்லுகிறார்கள். ஒருவன் ஒருவரை நம்பவேண்டுமானால், அவர் யார்? அவர் என்ன கொடுப்பார்? அவருக்கு எந்த ஊர்? இதெல்லாம் தெரியவேண்டுமே? இல்லாவிட்டால் எப்படி நம்பமுடியும்? "அவர் யார்" (யோபு 21:15; யாத். 5:2) "அவர் எப்படிப்பட்டவர்?" (லூக். 19:3) "அவர் எனக்கு என்ன தருவார்?" (ஆதி. 15:2) "தேவனைச் சேவிப்பதினால் என்ன பிரயோஜனம்?" (மல். 3:14) "ஜெபம் பண்ணுவதினால் பிரயோஜனம் என்ன?" (யோபு 21:15) இவற்றையெல்லாம் அறிந்து கொள்ளவேண்டாமா?

தேவ எக்காளப் பத்திரிக்கையை விரும்பி வாசிக்கும் அன்பு வாசகர்களே, தேவன் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். உங்கள் அன்பான முகங்களை நாங்கள் காணாதபோதிலும் உங்களுக்காக ஜெபிக்கிறோம். உங்கள் பிரச்சினைகள், வேதனைகள், கவலைகள், கண்ணீர்விடும் காரியங்கள் என்ன என்று அறியாமலிருந்தும் ஊக்கமாக உபவாசித்து, உங்களுக்காக ஜெபிக்கிறோம். அன்பின் தேவனைக் குறித்தும், அரவணைக்கும் தேவனைக் குறித்தும், கண்ணீரைத் துடைக்கும் தேவனைக் குறித்தும், சுகமாக்கும் தேவனைக் குறித்தும், விடுதலையளிக்கும் தேவனைக் குறித்தும் உங்களுக்கும், உங்கள் ஊர் மக்களுக்கும் சொல்ல ஆவலாக இருக்கின்றோம்.

1965-ஆம் ஆண்டு ஆனைமலைகளிலுள்ள அக்காமலைத், தேயிலைத் தோட்டத்தில் ஆண்டவர் இயேசுவைச் சந்தித்தது முதல் இன்றுவரை என் அன்பின் நேசர் இயேசுகிறிஸ்து எல்லா விஷயங்களிலும் எனக்குப் போதுமானவராயிருக்கின்றார். தேவன் எனக்கு இன்பமானவர். அவரது வேதம் என் மனமகிழ்ச்சி. சங். 1:1-3-ன் படி அந்த தேவனே நான் செய்வதெல்லாம் வாய்க்கும்படிச் செய்கிறார். சங். 34:8-10-ன் படி அந்த தேவனே ஒரு குறைவுமில்லாமல் என்னை நடத்தி வருகின்றார். அவர் என்றென்றும் எனக்குப் போதுமானவர். அவர் உங்களுக்கும் போதுமானவர். தேவன் நல்லவர். தேவன் வல்லவர். அந்த தேவாதி தேவனைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

உங்கள் ஊக்கமான ஜெபத்தை விரும்பும்

சாது ஜோராக்.

நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்

(ஓர் அதிசயமான சாட்சி)

அயர்லாந்து தேசத்தவரில் அந்நாட்டவரான டோம் நீட் ஹாமைப்போன்று வீரதீரச் செயல்களைத் தங்கள் வசம் கொண்டுள்ளோர் அநேகர் இருக்கவியலாது. டோம் நீட் ஹாமின் குழந்தைப் பருவ நாட்கள் கென்மார் வளைகுடாவின் கடற்கரையில் கழிந்தன. கிலர்னி என்ற பிரசித்திப்பெற்ற ஏரிகள் இவ்வளை குடாவிற்குச் சமீபமாகவேயிருக்கின்றன.

நீட் ஹாம் தனது பெற்றோரின் பத்துப் பிள்ளைகளில் கடைக்குட்டியாயிருந்தார். பிள்ளைகள் அனைவரும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்க்கப்பட்டவர்களாயிருந்தனர். நீட் ஹாம் தனது 13-ஆம் வயதில் தன்னுடைய வீட்டைவிட்டுச் சென்றுவிட்டார். கடற்படையில் சேர்ந்து அநேக ஆண்டுகாலம் பணி புரிந்ததற்கப்பால் வியாபாரக் கப்பல் ஒன்றில் அவர் சேர்ந்துகொண்டார்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவருடைய கப்பல் தென் அமெரிக்காவுக்குப் பிரயாணப்பட்டுச் சென்றுக்கொண்டிருந்தது. அவர் பணிபுரிந்து கொண்டிருந்த அக்கப்பலின் தலைவன் மிகக் கருணையற்ற ஒருவனும், தேவ பயமற்ற துன்மார்க்கனுமாயிருந்தான். தீவினையான நாள் ஒன்றில் கப்பலானது புனித ஜியார்ஜ் படகோனியா என்ற வளைகுடாவில் நங்கூரமிட்டு நின்று கொண்டிருந்தது. கப்பலிலிருந்த பணியாளர்கள் படகுகளில் கரைக்குச் சென்று உல்லாசமாய்ப் பொழுதைப் போக்கிவிட்டு வர அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தை நீட்ஹாம் மிக்க மகிழ்ச்சியுடன் பயன்படுத்திப் படகொன்றில் தனது சகாக்களுடன் கரைக்குச் சென்றார். இந்தப் படகுப் பயணம் எத்தனை துயரமான பின் விளைவுகளை உண்டுபண்ணும் என்பதை அப்பொழுது அவர் சற்றும் அறியக்கூடாதவராயிருந்தார். தான் வந்தடைந்த தீவாந்தரப் பகுதியின் இயற்கை எழிற்காட்சிகளைக் கண்டு களிகூர்ந்து தனித்து மகிழ்ந்து கொண்டிருந்த வேளையில் அவர் ஏறிவந்த படகானது அவரை விட்டு விட்டுக் கப்பலண்டை சென்றுவிட்டது. கப்பல் தலைவனின் நயவஞ்சகச் சூழ்ச்சியினால் இந்தக் காரியம் முன்கூட்டியே நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்டிருந்தது. காட்டுப் பிராந்தியமான, பாறைகள் நிறைந்த கடற்கரையில் அவர் ஏகனாய் அங்கலாய்த்து நின்று கொண்டிருந்தார். அவர் ஏறிவந்த கப்பல் நங்கூரத்தைத் தளர்த்திக்கொண்டு சமுத்திரத்தில் ஆடி அசைந்து தன் கண்களுக்கு முன்னர் சென்று கொண்டிருப்பதைக் கண்ணுற்ற நீட்ஹாமின் துயரத்தையும், இதய வேதனையையும் மனுஷீக வார்த்தைகள்கொண்டு வர்ணிக்க இயலாது.

நீட்ஹாம் இப்பொழுது எப்பக்கத்திலுமிருந்து ஆபத்தை எதிர்நோக்கவேண்டியதாயிருந்தது. தப்ப வழியே இல்லை.

அவர் அந்த தீவாந்தரமான சமுத்திரக் கரையில் வெகுநேரம் காத்திருப்பதற்கு முன்பே சிலமணி நேரத்திற்குள்ளாக ஊளையிடும் சப்தங்களைக் கேட்டார். சற்று நேரத்திற்குள்ளாக ஒரு கூட்டம் நரமாமிசப்பட்சணிகளான (Cannibals) காட்டுஇந்தியர்கள் அவரை சூழ்ந்து கைப்பற்றிக்கொண்டு சென்றுவிட்டனர். ஹிவ்ஜ் என்ற ஒருவித நரமாமிசப் பட்சணிகளின் இனத்தைச் சேர்ந்த இம்மக்களுக்கு வெள்ளையரின் மாமிசம் என்றால் மிகவும் கொண்டாட்டம். வெள்ளையர்கள் தங்கள் கைக்குக் கிடைத்துவிட்டால் ஒருக்காலும் இவர்கள் தப்பவிடுவதே கிடையாது.

இம்மக்கள் நீட் ஹாமை மூன்று மைல்கள் தொலைவிலுள்ள தங்கள் கூடாரங்களுக்குக் கொண்டுசென்றனர். மரணம் சமீபித்துவிட்டது. நரமாமிசப் பட்சணிகளின் விருந்து ஒன்றுக்கான ஆயத்தங்கள் துரிதமாக ஆரம்பமாயிற்று. கொட்டுகள் முழங்கின. நடனங்களும், பயங்கரப் பாடல்களும் தொடங்கிவிட்டன. நீட்ஹாமின் வஸ்திரங்கள் உரியப்பட்டன. மரண ஆபத்தின் வெகுநிச்சயமான விளிம்பில் மிலேச்சர்களான அவ்விந்தியர்கள் மத்தியில் திடீரென ஒரு பரபரப்பும், குழப்பமும், பீதியும் நிலவிற்று. நீட் ஹாமின் வலது கையில் கிறிஸ்து பெருமானின் சிலுவைக் காட்சியானது பச்சை குத்தப்பட்டிருந்தது. மனித சரீரத்தில் இவ்வித அடையாளத்தை இதற்குமுன் அவர்கள் காணவில்லையாதலால் இந்த பச்சை குத்தின அடையாளத்தைக் கண்டு அவர்கள் பெரிதும் கலக்கமுற்று ஒன்றும் செய்யாது திகைத்து நின்றனர். பயத்தால் தாக்குண்ட அம்மக்கள் அவரைத் தனித்து விட்டு விட்டுப் பின்வாங்கிச் சென்றனர். பின்னர் அந்தக் காட்டு மிராண்டிகள் பற்பல விதமான முறைகளைக் கையாண்டு அவரின் கையிலிருந்த பச்சை குத்தின அடையாளத்தை அகற்ற முயன்றும் ஒன்றும் பயனளிக்காமற் போகவே அவரது ஜீவன் பேரதிசயமாகப் பாதுகாக்கப்பட்டது. தேவகரமானது நிச்சயமான ஒரு பயங்கர மரணத்திலிருந்து அவரை அதி அற்புதமாகத் தற்காத்தது; தூரமான இடங்களிலுள்ள அவருக்கு அருமையானவர்களின் ஜெபத்தினாலேயேதான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நீட் ஹாமின் அற்புத விடுதலையின் காரணத்திற்கு மேற்கண்ட விளக்கத்தைத் தவிர வேறு எதைக் கூறினாலும் சற்றும் பொருத்தமாகாது.

இந்நடபடிக்கைக்குப் பின்னர் அந்த நரமாமிச பட்சணிகளின் தலைவனுக்கு அயர்லாந்து தேசத்தவரான நீட்ஹாமின் மேல் ஓர் தனிப்பட்ட அன்பும், பற்றுதலும் உண்டாயிற்று. அவன் அவருக்கு அநேக சலுகைகளை அளித்தான். படகோனியாவில் நரமாமிசப் பட்சணிகளிடம் அவர் சிறைப்பட்டிருந்த காலத்தில் அவர்களது

மொழியை நன்கு கற்றுக்கொண்டார். அம்மக்களுடன் சேர்ந்து உயிர் மோசம் நிறைந்த நீண்ட வேட்டைப் பயணங்களில் அவர் கலந்து கொண்டார். மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த வேட்டைக்காரனாக அவர் மாறிவிட்டார். தோல் சுருக்குக் கண்ணிகள் வைத்துக் காட்டு விலங்குகளையும், நெருப்புக் கோழிகளையும் பிடிப்பதில் அவர் திறமைசாலியானார்.

இந்நாட்களில் நீட்ஹாம் காட்டுமிராண்டிகளான நரமாமிச பட்சணிகளிடமிருந்து விடுதலை பெற்று நாகரீக எல்லைக் கோட்டினுக்குள் எவ்விதத்திலும் வந்துவிடப் பெரிதும் துடி துடித்துக் கொண்டிருந்தார். ஆயினும், அம்மக்களிடமிருந்து தப்பிச் சென்றுவிடுவது உயிர் மோசம் நிறைந்த ஒன்று என்பதை அவர் நன்கறிந்திருந்தார். அடிக்கடி அவரது நினைவுகளும், கற்பனைகளும் கென்மார் வளைகுடாவின் கடற்கரைக்குச் சென்று வட்டமிட்டுச் சுற்றிக்கொண்டிருந்தன. தான் பிறந்து வளர்ந்த தாயகத்தைத் திரும்பவும் காண எதை வேண்டுமானாலும் ஈடுகொடுக்க அவர் ஆயத்தமுள்ளவராயிருந்தார். ஒரு ஆண்டு காலம் முழுவதும் யோசித்து, யோசித்துத் தன்னை உறுதிப்படுத்தி ஒரு முடிவுக்கு வந்தார். தான் செத்து மடிவதானாலும் பரவாயில்லை, எவ்விதத்திலும் மிலேச்சர்களான இந்தியர்களிடமிருந்து தப்பிச் சென்றுவிட இறுதியில் முடிவுக்கட்டித் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டார்.

ஒருநாள் அம்மக்கள் அவரைக் கண்காணிப்பதிலிருந்து சற்று கவனமிழந்திருந்தவேளையில் காற்றிலும் கடுகியவேகத்தில்விரைந்து செல்லும் வலிமைமிக்க குதிரையொன்றில் ஏறி வானில்விட்ட ராக்கெட்டைப்போல உச்சகட்டவேகத்தில் அகண்ட புல்வெளிகளைக் கடந்து பாய்ந்துசென்றார். நீட்ஹாம் தங்களுடைய கூடாரங்களிலிருந்து தப்பிவிட்டதை அறிந்த இந்தியர்கள் தங்கள், தங்கள் குதிரைகளில் ஏறி அவரைப் பின்தொடர்ந்தனர். மரணத்துக்கும் ஜீவனுக்கும் இடையிலான ஒரு போராட்டமாக அது இருந்தது. முன்னணியத்தில் நீட்ஹாம் தனது குதிரையை அடித்துத் துரத்திச் சென்று கொண்டிருந்தார். அவரைப் பின்தொடர்ந்து இந்தியரும் தங்கள் குதிரைகளுடன் அவரை விரட்டிச்சென்றனர். மரணத்துக்கும் ஜீவனுக்கும் இடையிலான அந்த பயங்கரமான போராட்டத்தின் இறுதியில் அவர் வெற்றி பெற்றுவிட்டார். ஏறத்தாழ 25 மைல்கள் துரத்திச் சென்றதன் பின்னர் இந்தியர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட்டுச் சோர்படைந்து பின்வாங்கிவிட்டனர். தேவனின் அற்புத கரங்கள் நீட்ஹாமின் ஜீவனை மிலேச்சர்களான இந்தியர்களிடமிருந்து மீண்டும் ஒருமுறைகூட அதிசயமாகப் பாதுகாத்தளித்தது. இதன் பின்னர் அநேகநாட்கள் அவர் தமது பயணத்தைத் தொடர்ந்தார். காட்டாறுகளையும், ஏரிகளையும் கடந்து, கைக்குக் கிடைத்தவைகளைச் சாப்பிட்டுத் தன் ஜீவனைமாத்திரம் காத்துக்கொண்டு நாகரீக உலகின் எல்லைகளில் நுழைந்தார்.

பராணு நதிக்கு வந்து ஒரு கட்டுமரத்தின் உதவியால் நாளுக்குப்பின் நாளாகத் தண்டுவலித்து அந்நதியின் கீழ்த்திசைவழியாகச் சென்று இறுதியில் கரையை வந்தடைந்தார். அவர் கரைவந்து சேர்தபோது பிரேஸிலுக்கும் பாராடுவேக்கும் இடையே கடுஞ்சமர் நடந்துகொண்டிருந்தது.

நீட்ஹாம் இந்த இரண்டு படைகளுக்குமிடையே வசமாகச் சிக்கிக்கொண்டார். இராணுவத்தினர் அவரை ஓர் ஒற்றன் (Spy) என்று பிடித்துக்கொண்டு சென்றுவிட்டனர். இறுதியில் இராணுவத்தின் மேலிட உத்திரவுப்படித் துப்பாக்கிப் படையினரால் அவரைச் சுட்டுக் கொல்லும்படித் தீர்ப்பாயிற்று.

(அடுத்த இதழில் முற்றும்)

கிறிஸ்து இயேசுவினிமித்தம் சித்திரவதைகள்-10

(ஹாரலான் போப்போவ் பல்கேரியா நாட்டின் மிகப்பெரிய திருச்சபை ஒன்றின் போதகராவார். தேவன் பேரிலுள்ள அவரது அன்பு, விசுவாசம், பக்திவைராக்கியம் போன்றவற்றிற்காக அவர் அடைந்த சித்திரவதைகள் இச்செய்தியில் இடம் பெறுகின்றது.)

ஜூன் மாதத்தின் ஆரம்பத்தில் நாங்கள் மரணக் குழியிலிருந்து வெளியே வந்தோம். எங்களது உழைப்புகம்மியூனிஸ்ட்டுகளுக்குத் தேவைப்பட்டது. ஒரு சிறிய ஏரியைக் குப்பை, கூழங்களைப் போட்டு மூடும்படி எங்களுக்குக் கட்டளையிட்டனர். மரணக்குழியிலிருந்து வெளிவந்த எங்களைக் கண்டதான சிறைக்கூட அறைகளிலிருந்த மற்ற கைதிகள் பீதி அடைந்தனர். ஏனெனில், தாங்களும்கூட எங்களைப் போன்று இருப்பதை எண்ணி அவர்கள் நடுக்கமுற்றனர். நாங்கள் மிகவும் பெலவீனராயிருந்தபடியால் ஒருசில கூடைகள் மண்ணைக் கூடத் தள்ளுவண்டியில் போடுவது என்பது எங்களுக்கு மிகவும் கடினமாயிருந்தது. எனினும், சூரிய ஒளியும், சுத்தமான காற்றும் எங்களுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமாகவிருந்தது. இவ்வேலை முற்றுப்பெற்றபின் நாங்கள் மீண்டும் மரணக்குழியில் தள்ளப்பட்டோம்.

ஜூலை மாதத்தில் ஒரு சிறிய தீவினைச் (Island) சுற்றி மிக வும் துரிதமாகக் கரை கட்டும்படியாகக் கம்மியூனிஸ்ட்டுகள் மற்ற சிறைக் கைதிகளுக்கு உத்தரவிட்டனர். நாளொன்றுக்கு இரண்டு நாட்கள் வேலையைச் செய்யாத கைதிகளை நாங்கள் அடைப்பட்டுக் கிடந்த மரணக்குழிக்குள் தள்ளிவிட்டனர். ஏற்கெனவே இட நெருக்கடி மிகுந்ததாகவிருந்த மரணக்குழிக்குள் கைதிகள் வந்து நிரம்பத் தொடங்கினர். இப்படி உள்ளே தள்ளப்பட்டக் கைதிகளை அடுத்தநாள் காலையில் வேலைக்காக மீண்டும் வெளியே அழைத்துக் கொண்டனர். ஆனால், நாங்களோ இரவும், பகலும், சூரிய வெளிச் சமும், சுவாசிக்கப் போதுமான காற்றுமற்ற மரணக்குழியினுள், அந்தகாரக் காரிருளினுள் அடைக்கப்பட்டுக் கிடந்தோம். பொறிக் கதவு வேளா வேளைகளில் திறக்கப்படும் சமயத்தில் மாத்திரமே கொஞ்ச ஒளியை நாங்கள் காணமுடிந்தது.

நாங்கள் அனைவரும் ஒரே சமயத்தில் தூங்குவது இயலாத காரியமாகையால், எனது ஆலோசனைப்படி ஒரு பகுதியினர் மரணக் குழியில் தூங்குகையில் அடுத்த பகுதியினர் கஷ்டத்துடன் எழுந்து நின்றனர். பின்னர், தூங்கியவர்கள் நிற்க, நின்றவர்கள் தூங்கினர். இப்படி மாற்றி, மாற்றிச்செய்து கொண்டோம். நாங்கள் அனைவரும் மிகவும் அந்நியோன்யமாயும், சகோதர பாசத்திலும் ஒருவருக்கொரு வர் நடந்து கொண்டோம். இல்லையேல் அங்கு செத்து மடிவதைத் தவிர வேறு நிவிர்த்தியேயில்லை.

வாரங்கள் கடந்து சென்றபோது நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக விசாரணைக்காரர்முன் ஆஜர்படுத்தப்பட்டோம். என் முறை வந்தபோது மிட்டெஃப் என்ற பெயரையுடைய ஒரு விசார ணைக்காரன்முன் நான் நிறுத்தப்பட்டேன். மிட்டெஃப் என்னைப் பார்த்து "தோழர் (Comrade) போப்போவ் அவர்களே, நீங்கள், தோழர் டிரிட்செள அவர்களைச் சந்தியுங்கள்" என்று சொல்லி முடிப்பதற்குள்ளாக என் தலைக்கு மேலிருந்த மணி ஒலித்தது. மிட்டெஃப் என்னைத் "தோழர்" என்று அழைத்ததைக் குறித்து என் உள்ளத்தில் பலமான சந்தேகம் எழுந்தது. மாத்திரமல்ல, நாம் வெகு கவனமாக நடந்து கொள்ளுதல் அவசியம் என்பதை யும் உணர்ந்து கொண்டேன்.

டிரிட்செள என்னுடைய குடும்ப நலன்களை விசாரித்ததன் பின் னர் "தோழர், போப்போவ் அவர்களே, நாங்கள் உங்களை மரணக் குழியிலிருந்து விடுதலை கொடுத்துவிட நிச்சயித்துவிட்டோம். வருங் காலத்தில் நீங்கள் மிகவும்புத்தியோடும், கீழ்ப்படிதலோடும் எங்களுக் குமுன் நடந்துகொள்ளுவீர்கள் என்று நினைக்கின்றோம்" என்றான்.

என்னுடைய காதுகளையே என்னால் நம்ப இயலவில்லை. எனி னும், இந்த விடுதலைக்கும் ஓர் நிபந்தனை இருக்கும் என்று எனக் குள் எண்ணிக்கொண்டேன்.

இனிச் சித்திரவதையில்லை ......மரணக்குழியின் படுவேதனையில்லை........ஒன்றுமேயில்லை........இப்படி நான் எனக்குள் சிந்திப்பதற்குள்ளாக டிரிட்செள என்னைப் பார்த்து "நீங்கள் எங்களுக்கு ஒரு சிறிய உதவியைச் செய்யவேண்டும், அது யாதெனில், நீங்கள் போய் இராணுவக் கிடங்கிலுள்ள கைதிகளைப்பற்றியும், அவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்பதைப்பற்றியும் எங்களுக்குத் தகவல் அளித்து வரவேண்டும்" என்று அவன் கூறினன்.

நான் நினைத்ததைப்போலவே டிரிட்செளவின் காரியம் இருந்தது.

இப்படி நான் செய்வேனுயின் கம்யூனிஸ்ட்டுகளான, தேவனற்ற நாஸ்திகர்களான என் சத்துருக்களோடு நான் ஒத்துப்போகிறவனுகவும், பிறமக்களுக்கு விரோதமாக நான் உளவாளியாகப் பணிபுரிபவனுக இருப்பதுடன் என் ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்வினின்றும் பாதை தவறியவனுவேன் என்பதைத் திட்டமாக என் உள்ளத்தில் அறிந்து கொண்டேன். ஏற்கெனவே கம்யூனிஸ்ட்டுகள் என் சரீர வலிமையை உடைத்து நொறுக்கிவிட்டனர். என் மன வலிமையை மாத்திரம் அவர்களால் சிதைக்க இயலவில்லை. எவ்விதத்திலும் நச்சரவங்களான கம்யூனிஸ்ட்டுகளுக்கு நாம் விட்டுக் கொடுத்தல் கூடாது என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டு அமைதியாக நின்று கொண்டிருந்தேன்.

இரண்டு காரியங்கள் என் கண் எதிரே ஓடிக்கொண்டிருந்தன. ஒன்று - டிரிட்செளவின் விருப்பத்திற்கு இணங்கிவிட்டால் சித்திரவதைகளில்லை, மரணக்குழியிலிருந்து விடுதலை, சூரிய ஒளி, தூய்மையான ஆகாயத்தை அனுபவிக்கலாம். மற்றென்று - அவனது விருப்பத்திற்கு இணங்காமல் தேவனுக்கு உண்மையுள்ளோனுயிருந்து, சக கைதிகளுக்கும் உத்தமனுக நடந்து கொண்டால் மரணக்குழியில் கிடந்து காற்றும், ஒளியுமின்றி, வெப்பத்தால் சாவது.

கண்களை மூடி சற்றுநேரம் மனதிற்குள் அமைதியாக ஜெபித்துக் கொண்டிருந்தேன். விசாரணைக்காரர்கள் டிரிட்செளவும், பிட்டெஃப்பும் எனது பதிலை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தனர். திடீரென கர்த்தருடைய வார்த்தை என் உள்ளத்தில் தொனித்தது. "........உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும்". (1 பேதுரு 1:7)

நான் "சரி" என்று ஒத்துக்கொள்ளுவேனுயின், நானொரு மார்க்கப் பகைஞனும், தேவன்பேரில் நான் கொண்டிருக்கும் நம்பிக்கையை இழந்துபோகிறவனுகவுமிருப்பேன் என்பதைப் பூரணமாக நான் அறிந்து கொண்டேன்.

இதைத் தொடர்ந்து "இல்லை" என்ற பதிலைக் கூறினேன்.

இதைக் கேட்டதுதான் தாமதம் டிரிச்சௌ என்னை மரியாதை யுடன் அழைத்த "தோழர்" போன்ற வார்த்தைகளெல்லாம் பறந்து போய்விட்டன. அவன் என்னைப் பார்த்து "போப்போவ், மிகத் துரிதமாகப் பதிலளிக்காதே. இது ஒரு ஆபத்தான விஷயம். நீ இதைக்குறித்து இன்னும்ஆழமாகச் சிந்தித்துப்பார். நான் உன்னை எச்சரிக்கின்றேன். நீ விட்டு வந்துள்ள மனைவி, பிள்ளைகளைக் கட்டாயம் திரும்பப் போய்ப் பார்க்கவேண்டும். அப்படித்தானே?" என்றான்.

"நான் ஒரு போதகன் என்பது உங்களுக்குத் தெரியும். நான் தேவனில் விசுவாசமுள்ளவன், அவருக்கு ஊழியஞ்செய்பவன். இச் சிறைக்கூடத்திலுள்ள கைதிகளுக்குங்கூட நான் ஒரு போதகன்தான் இப்படியிருக்க அவர்கள் பேசுவதையெல்லாம் கவனித்துக்கேட்டு உங்களிடம் வந்து கூறும்படிச் சொல்லுகின்றீர்கள். அந்தக் காரியத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்"என்று கூறிக்கொண்டே நான் எனது பேச்சைத் தொடர்ந்தேன். "எனக்கும், இந்தச் சரீரத் திற்கும் நீங்கள் என்னசெய்ய விரும்புவீர்களோ அதனைச் செய்யுங் கள். சொல்லப்போனால் இந்த என் சரீரம் மண்தானே. ஆனால், நான் ஒருக்காலும் என் விசுவாசத்தை மறுதலிக்கப் போவதில்லை" என்றேன்.

எனது வார்த்தைகளைக்கேட்ட டிரிச்சௌ தனது கையை மூடிக் கொண்டு, குத்துபவனைப்போல கர்ச்சனை செய்தவனாக "அப்படியா னால் நீ அந்த மரணக்குழியில் கிடந்து அழுகி நாற்றமெடுத்துச் செத் துத் தொலை" என்றான். இவ்விதமான வார்த்தைகளை முன்பு ஒருவ னிடம் ஒருமுறை நான் கேட்டேன் தேவன் அதை செயலாக்க விடாமல் தடுத்துப்போட்டார். இப்பொழுது இவன் பேசுகிறான். இதையும் தேவன் தடுப்பார் என்று நான் என் உள்ளத்தில் நிச்சயித் துக்கொண்டேன்.

நான் மறுபடியும் மரணக்குழியில் போடப்பட்டேன். ஆகஸ்ட் மாதத்தில் எங்கள் அனைவரையும் சீதபேதி (Dysentery) பிடித் தது. ஒருமாதகாலம் அது நீடித்தது. இறுதியில் அது எங்களை எலும் புகள்மேல் போர்த்தப்பட்டக் குச்சு மனிதர்களாக ஆக்கிவிட்டுச்சென் றது. நான் போடப்பட்டிருந்த மரணக்குழியின் நரக வேதனையை அதிகமாக விஸ்தரிக்க நான் விரும்பவில்லை. நீங்களும் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். அது ஒரு நரகமாக மாறிற்று. மரணக்குழியில் போடப்பட்டிருந்த மக்கள் செத்த சவங்க ளைப்போல அசைவின்றிப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு கிடந்தனர். மலத்தாலும், மூத்திரத்தாலும் நிரம்பிவழிந்த பீப்பாய்களிலிருந்து எழும்பிய கொடிய துர்க்கந்தம் எங்களை மூச்சுத் திணறச்செய்தது. ஏறத்தாழ 24 மணிநேரமும் இருளுக்குள்தான் நாங்கள் கிடந்து தத் தளித்துக்கொண்டிருந்தோம். எங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆகா

ரம் அப்பிராத்திரிய வாசிவிருட்டப்பட்டுத் தண்ணீர் மாத்திரந்தான். பிராணவாயுவைக்களைப் பெறுவதற்கென்றே சப்தமேதனி மரணக்குழியில் வேறு சப்தமே இல்லை. இந்த நாகவேதனை இன்னும் எத்தனை காலம் நீடிக்குமோ? ஏற்கனவே 7 மாதங்கள் இப்படி வேதனைப்பட்டு அநுபவித்தாகிவிட்டதே என்று நான் ஏங்கினேன். இந்நாட்களில் மரணக்குழியில் தள்ளப்பட்டிருந்த அநேகர் மரித்துப்போய்விட்டனர். அவர்களைக் கொடுத்துவைத்த பாக்கியசாலிகள் என்பேன்.

இதற்கப்பால் ஆகஸ்ட் மாதக் கடைசியில் எங்கள் சிறைக்கூட நிர்வாகம் மற்றொரு புதிய மனிதனின் கரங்களுக்கு மாறினது. அதுவரை நான் உயிரோடிருந்தது தேவகிருபையே. புதிய கம்யூனிஸ நிர்வாகத்தினர் எங்களிடமிருந்து கடினமான வேலையை எதிர்நோக்கியபடியால் செப்டம்பர் மாத ஆரம்பத்தில் எங்களில் அநேகரை மரணக்குழியிலிருந்து விடுவித்தனர். நான் நவம்பர் 11-ம் நாள் விடுதலை பெற்றேன். இருளானதும், துர்க்கந்தம் வீசுகின்றதும், அளவுக்கிறதுமான நரகக்குழியில் 9 மாதங்கள் நான் என் நாட்களைச் செலவிட்டு திரும்பவும் வெளியே வந்ததென்பது அற்புதமான தேவப் பாதுகாவல்தான்!

விசாரணைக்காரன் டிரிட்சென சொன்ன தீர்க்கதரிசனம், அதாவது, "மரணக்குழியில் கிடந்து அழுகி நாற்றமெடுத்துச் செத்துத் தொலை" என்ற வார்த்தைகளைத் தேவன் அழித்துப்போட்டார். நம்முடைய காலங்களும், முடிவுகளும் மனிதனின் விருப்பங்களிலோ அல்லது அவனது கணிப்புகளிலோ கிடையாது. சர்வவல்லவரின் கரங்களில் அவைகள் உள்ளன. மரணக்குழியின் கதவைக் கர்த்தர் திறந்தார். நான் வெளியே வந்தேன். இப்பொழுது வழக்கமானதோர் சிறைக்கூட வாழ்விலுக்குள் நான் பிரவேசித்தேன்.

உங்கள் பதிவு எண்

உங்கள் முகவரிக்குச் சற்று மேலே உங்கள் பதிவு எண் உள்ளது. இது மிகவும் விசேஷமானது. எனவே உங்கள் பதிவு எண்ணை எப்பொழுதும் கவனத்தில் வைத்துக்கொண்டு அதனைக் குறிப்பிட மறவாதேயுங்கள். இப்படிச்செய்வதினால் விலையேறப்பெற்ற பொன்னான காலத்தைப் பாதுகாத்துத் தருகின்றீர்கள் என்பதை அன்பாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய ஊழியத்தின் பாதையில் ஒரு நிமிஷநேரங்கூட அத்தனை அருமையாயிருக்கின்றது.

தேவ எக்காளம்.

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது இந்தியாவின் எந்த ஒரு சபைப்பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிகையல்ல. பத்திரிகையின் ஆண்டு சந்தா ரூ. 5/– மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:

DEVA EKKALAM,

Kotagiri P. O.-643217, Nilgiris, S. India.

நான் கண்ட சாது சுந்தர்சிங்.

(Y. M. C. A. காரியதரிசியாக இங்கிலாந்தில் சிலகாலம் வேலைபுரிந்து கொண்டிருந்த **Mr.** சொரன் சின்ஹா என்பவர் சிம்லாவிலுள்ள தமது வீட்டில் சுந்தர்சிங் தங்கியிருந்த நாட்கள் ஒன்றில் நிகழ்ந்ததோர் அதி அற்புதமான சம்பவத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்)

ஒருநாள் இரவு நாங்கள் எங்கள் படுக்கைக்குப் போவதற்குச் சற்று முன்னர் எங்கள் வீட்டிற்கு முன்பாகவிருந்த மலைப் பள்ளத்தாக்கில் விளக்குகள் நகர்ந்து கொண்டிருப்பதை நாங்கள் கவனித்தோம்.

"மனிதர் சிலர் சிறுத்தைப் புலி ஒன்றை அநேகமாகப் பின்தொடர்ந்து சென்று கொண்டிருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன்" என்று சாது என்னிடம் கூறினார்.

நடுஇரவிற்கு வெகுநேரத்திற்குப் பின்னர் சுந்தர்சிங்கின் அறையில் சப்தம் கேட்டதைக் கேட்டுத் தூக்கத்திலிருந்து நான் விழித்தெழுந்தேன். ஆம், அவர் படுக்கையிலிருந்து எழும்பிவிட்டார் என்பதை நான் அறிந்து கொண்டேன். சற்றுநேரத்தில் வெளிப்புறக் கதவுகள் கிரீச்..... என்று சப்தமிட்டது. ஜெபிக்கும் பொருட்டாக வீட்டை விட்டு வெளியேறி பள்ளத்தாக்கிற்குச் சுந்தர் செல்லுகின்றார் என்பதை நானறியலானேன். இராக்கால மணி நேரங்களை இவ்விதமாக ஜெபத்தில் செலவிடுவது அவரது வழக்கம் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் அவர் வெளியே சென்றதைக் குறித்து நான் வியப்படையவில்லை. ஆனால், குறிப்பிட்ட மணி நேரத்திற்குப் பின்னரும் அவர் வீட்டிற்குத் திரும்பவில்லையாதலால் பள்ளத்தாக்கிலுள்ள சிறுத்தைப் புலியைப்பற்றிய நினைவு எனக்கு வரவே மிகவும் பரபரப்படைந்து உடைமாற்று அறைக்குச் சென்று ஜன்னல்கள் வழியாகப் பள்ளத்தாக்கை உற்றுநோக்கினேன். நட்சத்திரங்கள் நிறைந்த பிரகாசமான அழகான இரவு அது. வீட்டிற்குச் சற்று கீழாகப் பாறைச் சரிவில் சுந்தர் உட்கார்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். ஒரு மெதுவான மென்மைக் காற்று மரங்களின் இலைகளின் ஊடாக வீசிக்கொண்டிருந்தது. அசைவற்றுப் பாறையில் தியானத்தில் மூழ்கியிருந்த சுந்தரை நான் சற்றுநேரம் பார்த்தவனாய் நின்று கொண்டிருந்தேன்.

இதன்பின்னர் ஏதோ ஒரு உருவம் அவரது வலது கைப் பக்கம் பதுங்கிப், பதுங்கி நகர்ந்து வருவதை என் கண்கள் ஆச்சரியத்துடன் உற்றுநோக்கின. ஒரு மிருகம் அவரை நோக்கி வந்து

கொண்டிருந்தது. அது அவரண்டை வந்து சேர்ந்தபோது அது ஒரு சிறுத்தைப் புலி என்பதை நான் திட்டம் தெளிவாக என் கண்களால் கண்டேன் பயத்தால் என் உடம்பு சிலிர்த்தது. என் தொண்டை உமிழ்நீரால் அடைப்பட்டது. ஆடாமல், அசையாமல் பயத்தால் தாக்குண்டவனாய் அப்படியே நின்று கொண்டிருந்தேன். சுந்தரைச் சத்தமிட்டுக் கூப்பிடவும் முடியாதவனாய்த் திகைப்புற்று நின்று கொண்டிருந்தேன். இதன்பின்னர் சுந்தர் தமது முகத்தை அந்த மிருகத்திற்கு நேராகத் திருப்பித் தமது கரத்தை அதற்கு நேராக நீட்டினார். வீட்டில் வளர்க்கப்படும் நன்கு பழக்கமானதோர் அன்புள்ள நாயைப்போன்று அந்தச் சிறுத்தை அவருக்கு முன்பாகப் படுத்துத் தனது தலையைத் தடவிக்கொடுக்க விரும்புவதை நான் அதிக ஆச்சரியத்தோடு கவனித்தேன்.

மனிதர் நம்பக்கூடாததான ஓர் விந்தை நிகழ்ச்சி இது. என் சொந்தக் கண்களால் அதனைக்கண்ட நான் என்றும் அக்காட்சியை மறத்தல் கூடாத காரியம்.

சற்று நேரத்திற்குப்பின் சுந்தர் வீட்டிற்குத் திரும்பி வந்து தமது படுக்கைக்குச் சென்று அயர்ந்து தூங்கிவிட்டார். சுந்தர் தூங்கிவிட்டபோதிலும் நான் எனது படுக்கையில் விழித்தவனாய்க் கிடந்து, கொடிய காட்டு விலங்குகள் பேரிலும் சுந்தருக்கு இத்தனை வல்லமையைக் கொடுத்த தேவனது மாட்சியை எண்ணி ஆச்சரியமுற்றவனாய்ச் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தேன்.

பூனாவில் சுந்தர் இருந்த கடைசி நாளன்று காலை 7 மணியிலிருந்து இரவு 7 மணிவரை அவர் தமது அறையிலேயே ஜெபத்தில் தனித்திருந்தார் அந்நாளில் அவர் எவ்வித உணவும், ஒரு துளி தண்ணீர் தானும் குடிக்கவில்லை. அந்நாளில் அனைவருக்கும் அறிமுகமற்ற ஒரு புகைப்படக்காரர்வந்து சுந்தரை புகைப்படம் எடுக்க விரும்பினார். சுந்தர் இதற்கு இணங்க மிகவும் மறுத்தாராம்.

“என்னை ஏன் புகைப்படம் எடுக்க வேண்டும்? மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட இந்தச் சரீரம் இறுதியில் மண்ணுக்குத்தானே திரும்புகின்றது” என்று அவர் கூறினதாகச் சொல்லப்படுகின்றது.

இறுதியில், அநேகரின் அன்பான வற்புறுத்துதல்களின் காரணமாக அவர் தன்னைப் புகைப்படம் எடுக்க மிகவும் மனக் கஷ்டத்தோடு இணங்கினாராம்.

பாவத்தின்மேல் வெற்றி

“நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?” (ரோம. 7:24)

“கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொரு புதியமனிதனும் உண்மையில் இரண்டு மனிதர்கள்” என்று ஸ்பர்ஜன் ஒரு சமயம் கூறினர்.

ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்பொழுது தேவன் அவனில் பழைய மனிதனை ஒட்ட வைப்பதில்லை, பதிலாக, புதிய மனிதனை அவர் அவனில் வைக்கின்றார். பழைய மனுஷனின் சுபாவம் இன்னும் அங்கேயேதானிருக்கின்றது. ஆனால், அது புதிய மனுஷனின் ஆளுகைக்குத் தானாகவே இணங்கிவிடுகின்றது. பழைய மனுஷன் இயல்பாகவே மரித்துப்போனபோதினும் நாம் அவனை எங்கும் சுமந்துகொண்டுதான் திரியவேண்டியதிருக்கின்றது.

பண்டைய காலத்து வெற்றி வேந்தர்கள் தாங்கள் யுத்தத்தில் சிறைபிடித்த போர்க்கைதிகள் தப்பிச் சென்றுவிடாமலிருக்க செத்த மனிதப் பிணம்ஒன்றை ஒவ்வொருவரின் முதுகிலும்வைத்து இறுக கட்டிவிடுவது வழக்கமாம். இந்தக் கொடிய சித்திரவதை காரணமாக அக்கைதிகள் எவ்விதத்திலும் ஓட இயலாது போய்விடுகின்றனர். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் மேற்கண்ட நிகழ்ச்சியை தன் கண்ணாரக் கண்டுகொண்டிருப்பார் என்றெண்ணிச் சிலர் ரோமர் 7:23–ஐ “நிர்ப்பந்தமான மனுஷன் நான்! என்னை தொடருகின்ற இந்த மரித்துப்போன சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்?” என்று வாசிக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது. ஒவ்வொரு விசுவாசியும் தனக்குள்ளாகப் போரிட்டுக்கொண்டிருக்கும் இருவித சுபாவங்களை நன்கு அறிய முடிகின்றது. அப்போஸ்தலனும் இதனைத் தமது சரீர அவயவங்களில் போரிடக் கண்டார் என்று நாம் பார்க்கின்றோம். பரிசுத்த ஆவியானவருக்குச் சமூலமாக ஒப்புவிப்பதன்மூலம் இதிலிருந்து வெற்றிகிடைக்கின்றது என்பதனையும் அவர் கூறுகின்றார்.

ஒரு அமெரிக்கஇந்தியன் ஒருசமயம் ஒருவியாபாரியிடம் சாமான்கள் வாங்கினான். வீட்டிற்கு வந்து பார்த்தபோது தான் வியாபாரியிடம் வாங்கின பொருட்களுடன் எதிர்பாராத விதமாகக் கொஞ்சம் பணம் இருப்பதைக் கண்டான். அவன் ஒருகிறிஸ்தவனாக இருந்தபடியால் தன்னிடம் தற்செயலாக வந்த பணத்தைக் குறித்துச் சிந்தித்தபோது இரவில் தூக்கம் வரவில்லை. எனவே, அடுத்த நாள் அதிகாலை அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வியாபாரியிடம் கொடுப்பதற்காகச் சென்றான். “பணத்தை உன்வசமே வைத்துக்

கொள்ளாமல் நீ ஏன் எடுத்து வந்தாய்?" என்று வியாபாரி கேட்ட போது அந்த அமெரிக்க இந்தியன் தன் நெஞ்சை சுட்டிக்காண்பித்துக் கீழ்க்கண்டவாறு பதிலளித்தானும்:-

"இங்கே என் உள்ளத்தினுள் இரண்டு மனிதர் இருக்கின்றனர். ஒருவன் "பணத்தை உனக்கே வைத்துக்கொள்" என்று சொல்லுகின்றான். மற்றவன் "அது சரியல்ல, திரும்பக் கொடுத்து விடு" என்கின்றான். எனக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை. ஆனால், நான் பணத்தை எத்தனைநேரம் என்வசம் வைத்துக் கொண்டிருந்தேனே அவ்வளவுக்கு என் உள்ளம் சமாதானமின்றி சஞ்சலமடைந்தது, ஆகவே திரும்பக் கொண்டுவந்துவிட்டேன். இப்பொழுது என் உள்ளம் சமாதானத்தால் பொங்குகின்றது" என்றானும்.

கிறிஸ்தவ வெற்றி வாழ்க்கையின் இரகசியம் அவனுக்குள்ளிருந்து சதா எழும்பிக்கொண்டிருக்கும் ஆவியின்குரல், மாமிசக்குரல் ஆகிய இவ்விரண்டு குரல்களில் அவன் செவிகொடுக்கும் குரலின் அடிப்படையில் தானுள்ளது.

நீ எந்த குரலுக்கு செவிசாய்க்கின்றாய்? இயேசு உன் வாழ்க்கையை ஆளுகை செய்ய இடமளிப்பாயா?

"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள், ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்." (ரோம. 8:13)

ஆயிரம் பேர்களில் ஒருவன் கர்த்தரிடம் திரும்புவதையும், உலக ஆசைஇச்சைகளை உதறித் தள்ளி கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை அவன் பின்பற்றிச் செல்லுவதையும், ஆவிக்குரிய காரியங்களையே அம்மனிதன் பேசி, அவற்றையே விரும்பி நேசிப்பதையும், மனந்திரும்பிப் பாவ அசுசிகளிலிருந்து அவன் தன்னை சுத்திகரிக்க வாஞ்சிப்பதையும் பிசாசு கண்ணோக்குகையில், அம்மனிதனை தேவனைப்பற்றும் காரியங்களிலிருந்து பிரித்துவிட ஆயிரம் விதமான வழிகளைக் கையாளுகின்றான். ஆயிரம் விதமான உபாய தந்திரங்களையும், கண்ணிகளையும் பிசாசு அம்மனிதனுக்கு எதிராகவைத்து அவனுக்கு விரோதமாக முழுமூச்சுடன் போராடி மீண்டும் அசுத்தமான தீயஎண்ணங்களால்அம்மனிதன் தன்னைக்கறைப்படுத்திக்கொண்டு கிறிஸ்துவின் அன்பைவிட்டு விலகி உலக நேசத்திற்குத் திரும்பும்படியாகச் செய்கின்றான் இதைத்தொடர்ந்து உபத்திரவங்களையும், பொய்யான குற்றச்சாட்டுகளையும், மாந்தரின் பொய்ப்புறணிகளையும், மனுஷ பகைமையையும் மேற்கண்ட மனிதனுக்கு விரோதமாகக் கிளறிவிடும்போது தேவ அன்பிலிருந்து அம்மனிதன் மருளவிழ வழி பிறந்து விடுகின்றது.

(கி. பி. 1400-ம் ஆண்டில் எழுதப்பட்டதோர் வாசகம்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரனே, சகோதரியே, உனது பிரச்சினைகளுக்காக, கிறிஸ்தவ வாழ்க்கைப்போராட்டங்களுக்காக நீ இதுவரை ஜெபித்து வந்திருக்கின்றாய். கண்ணீர்சிந்திக் கர்த்தரிடம் மன்றாடி வந்திருக்கின்றாய். ஆயினும் நீ ஒரு பலனையும் காணவில்லை. உன் உள்ளம் சோர்ந்துபோயிற்று. உண்மைதானே. இனி ஒன்றுசெய், துதியை முயற்சித்துப்பார். உன் வாய்குளிர உன் கர்த்தரை ஸ்தோத்திரி.

மனந்திரும்பாத கணவனா? சொல்லுக்கடங்காத மனமேட்டிமையான மனைவியா? கீழ்ப்படியாத பிள்ளைகளா? குடும்பத்தின் இரட்சிப்பா? நீ நெடுநாளாய் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஓர் கர்ப்பத்தின் கனியா? உபத்திரவப்படுத்தும் கொடிய வியாதியா? கடன் தொல்லைகளா? மட்டில்லா வறுமையா? சத்துருக்களின் சதி சர்ப்பனைகளா? நிந்தை, அவமானமா? வேலையில்லாத் திண்டாட்டமா? உன் பிரச்சினை எதுவாயினும் அதற்காக உன் நேசகர்த்தரை இனித் துதிக்கத் தொடங்கு. உன் வறண்ட வாழ்க்கை அற்புதங்களால் நிறைவதைக் காண்பாய்.

எரிகோவின் கோட்டையைத் துதி என்னும் ஆயுதத்தால் இஸ்ரவேல் ஜனங்கள் தகர்த்துப்போடவில்லையா? தங்கள் கால்கள், கரங்களில் கிடந்த மரணத்திற்கேதுவான சங்கிலிகளையும், விலங்குகளையும் பவுலும், சீலாவும் துதி ஸ்தோத்திரங்களால் தெறியுண்டு போகப்பண்ணவில்லையா?

உன் பிரச்சினைகளும், கட்டுகளும் எரிகோ கோட்டையின் ரூபத்திலோ அல்லது விலங்குகள், சங்கிலிகள் ரூபத்திலோ எவ்வகையிலிருப்பினும் சரியே துதியை இன்றே முயற்சித்துப்பார்.

டப்ளின் என்ற இடத்தில் அநேக ஆண்டுகள் கர்த்தருக்கு ஊழியம்செய்த ஹென்றி பீவ்லின் என்ற தேவ ஊழியர் 1876-ஆம் ஆண்டு மரணமடைந்தார். அவர் கர்த்தருடைய சமூகத்திற்குள் பிரவேசிப்பதற்குச் சற்று முன்னர் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்:-

“படகு முழு நிச்சயத்தோடும் அனைத்துப் பாய்களோடும் (Sails) துறைமுகத்தினுள் நுழைகின்றது. படகானது சிறியதாக விருப்பினும் அதில் ஏற்றப்பட்டுள்ள பொருள் மிக்க விலைமதிப்புடையதாகும். படகின் தலைவர் மிகப் பெரிய கப்பல் தலைவராவார். ஆம், அவர்தான் எனது இயேசுகிறிஸ்து” என்றாராம்.

வாழ்கை மெதுவாக நகர்ந்து செல்லுவதாயினும், உண்மை யில், கடந்து மறைந்து சென்றுகொண்டேயிருக்கின்றது. நமது பூவுலக வாழ்வின் பூரண கருப்பொருளை நித்தியத்தில் நாம் காண்போம். நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நடபடியும் நித்தியத்தில் அதிர்வை (Vibration) உண்டுபண்ணும் ஆற்றலுடையது. வாழ்கையில் நாம் வெறுமனே நோக்கமின்றி அங்குமிங்கும் அலைசடிப்பட்டு மிதந்துகொண்டிருப்பது மதியீனமாகும். கர்த்தருக்கேற்ற நல்லதீர்மானங்களை எடுத்து அவற்றை நினைவில்கொண்டு அவற்றை செயல்படுத்துதல் வாழ்க்கையை ஆசீர்வாதமாகவும், அர்த்தமுடையதாகவும் மாற்றும். புத்தாண்டில் புதிய தீர்மானங்களை எடுத்தல் மிகவும் அவசியமாகும். கடந்த ஆண்டுகளில் எடுத்த தீர்மானங்கள் எல்லாம் உடைந்து நொறுங்கிப் போயிற்றே என்று இப்பொழுது நாம் கண்ணீர்வடிக்கத் தேவையில்லை. ஒவ்வொரு தோல்விக்குப் பின்னரும் நம்மை முன்னணியத்துக்குக் கொண்டுசெல்லக் கர்த்தர் உண்மையும், வல்லமையும் உடையவராயிருக்கின்றார். கிறிஸ்து இயேசுவின் மூலமாக நாம் யாவற்றையும் செய்யலாம். தீர்மானம் எடுப்பது ஆளுக்கு ஆள் வித்தியாசமுடையதாயினும் நமது வாழ்க்கையின் பெலவீனமான பகுதிகளைப் பெலமுடையதாக்கும் நிலையிலேயே நமது தீர்மானங்கள் அமைதல் அவசியமாகும்.

Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil
Published by the Editor N. Samuel, Kotagiri-643217, Nilgiris.